# உதயன்


சுடர் : 36 | கதிர் : 155 | வெள்ளிக்கிழமை | சித்திரை 17 ஆம் நாள் 30 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111


## வங்கிகளுக்கு இன்று அரைநாள் விடுமுறை

யாழ்ப்பாணம், ஏப். 30

இலங்கையிலுள்ள வங்கிகளுக்கு இன்று விசேட அரைநாள் விடுமுறை 19

# எகிறுகிறது தொற்று நேற்றும் 1,531 பேர்



### ஒரு நாளில் அதிகளவானோர் அடையாளம்

கொழும்பு, ஏப்ரல் 30

இலங்கையில் நேற்று மட்டும் ஆயிரத்து 531 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டில் நாள் ஒன்றில் அதிகளவான தொற்றாளர்கள் நேற்றுப் பதிவாகியுள்ளனர். நாட்டில் கடந்த மூன்று நாள்களாக நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தொற்றுடன் அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர். 19

## மாமனாரின் தாக்குதலில் மருமகன் உயிரிழப்பு!

கிளிநொச்சி, ஏப்.30

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மயில்வாகனபுரத்தில் தாக்குதலுக்கு இலக்காகி ஒருவர் 19

## கஞ்சாவுடன் 3 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஏப்.30

பருத்தித்துறை வியாபாரி மூலையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்பு பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் 31, 38 மற்றும் 19

## கொவிட் சிகிச்சை மையம் வன்னியில் அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 30

வடக்கு மாகாணத்தில் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் நிலையில் வன்னிப் பிராந்தியத்தில் கொரோனாச் சிகிச்சை நிலையம் அமைப்பதற்குரிய இடம் ஒன்றை அடையாளப்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர், மூன்று மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்களுக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார். யாழ்ப்பாணம் வட் 19

## கொடிகாமத்தில் நால்வர் தொற்றுடன் அடையாளம்

*எழுமாற்று பி.சி.ஆரில் கண்டறிவு*

கொடிகாமம், ஏப்.30

கொடிகாமம் சந்தை மற்றும் அதை அண்டிய பகுதிகளில் வியாபாரம் மேற்கொள்வோரிடம் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் நால்வருக்குக் கொரோனாத் 19

## கொரோனா தொற்றால் 6 பேர் சாவு!

கொழும்பு, ஏப்.30

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்றிரவு சுகாதார அமைச்சு 19

## யாழ்ப்பாணத்தில் 14 பேர் தொற்றுடன் அடையாளம்

யாழ்பபாணம், ஏப்.30

வடக்கு மாகாணத்தில் நேற்று 19 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 14 பேர் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 19

## இரண்டாவது டோஸ் வழங்க தடுப்பூசிகள் பற்றாக்குறை

*சுகாதாரத் தரப்பினர் தகவல்*

கொழும்பு, ஏப்.30

இலங்கையில் கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது 'டோஸ்' ஏற்றிக் கொண்டவர்களுக்கு, இரண்டாவது 'டோஸ்' ஏற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், சுகாதார அமைச்சிடம் தற்போது 3 லட்சத்து 30 ஆயிரம் ஒக்ஸ்போர்ட் அஸ்ராஜெனகா தடுப்பூசிகள் மாத்திரமே இருக் 19

## மத வழிபாடுகளுக்கு கடும் கட்டுப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப். 30

வடக்கு மாகாணத்தில் முக்கியமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு ஆலயங்களின் திருவிழாக்களும் 19

## குளிரூட்டப்பட்ட இடங்களில் பணிபுரிவது அதிக ஆபத்து

கொழும்பு, ஏப்.30

தற்போதைய கொரோனா நிலைமைகளுக்கு மத்தியில் குளிரூட்டப்பட்ட அலுவலகங்கள் அல்லது இடங்களில் கடமைகளைச் செய்யும்போது ஒருவர் எப்போதும் 19

## இந்தியாவிலிருந்து வருவோரை தங்கவைக்கத் தனியான இடம்

*வடக்கு ஆளுநர் பணிப்பு*



யாழ்ப்பாணம், ஏப். 30

இந்தியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் அங்கிருந்து கடல் வழியாக வரும், ஈழ அகதிகளைத் தனியாக தடுத்து வைப்பதற்கு மன்னா 18

## இரண்டாவது டோஸ் ஏற்ற வடக்கில் ஆர்வம் குறைவு

யாழ்ப்பாணம், ஏப். 30

கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸை ஏற்றியவர்கள் பலர், இரண்டாவது டோஸ் ஏற்றுவதற்கு ஆர்வம் இல்லாது இருக்கின்றனர் எனத் தெரியவருகின்றது. கொரோனாத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்ட முதல் 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளாந்தம் 60 தொற்றாளர்கள் திருமலையில் கண்டறிவு

கொழும்பு, ஏப். 30
திருகோணமலை மாவட்டத்தில் நாளாந்தம் 60 பேர் கொவிட் 19 வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத்தில் மாத்திரம் திருகோணமலை மாவட்டத்தில் 500 க்கும் அதிகமான கொவிட் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

மாவட்டத்தில் பதிவாகும் கொவிட் தொற்றாளர்கள் குச்சவெளி மற்றும் ஈச்சிலம்பற்று ஆகிய கொவிட் சிகிச்சை மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். குறித்த சிகிச்சை நிலையங்களில் 160 நோயாளர்களுக்கு மாத்திரமே இடவசதி உள்ளது.

ஏனைய நோயாளர்கள் மாவட்டத்தின் வெளி சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

அதேபோல், இடைநிலை சிகிச்சை மையங்களாகப் பயன்படுத்தக்கூடிய இடங்கள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

## தாயும் மகனும் கடத்தப்பட்டு சித்திரவதையின் பின் விடுதலை

### நெல்லியடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 30
நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கரணவாய் பகுதியில், தாயையும் மகனையும் கடத்திய விவகாரம் தொடர்பில், ஒருவர் கைதுசெய்யப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

58 வயதுடைய தாயையும் 15 வயதுடைய மகனையும் அவர்களின் வீடு புகுந்து கடத்தியமை, சித்திரவதை புரிந்தமை, தாக்குதல் நடத்தியமை, பாலியல் துன்புறுத்தலில் ஈடுபட்டமை என 12 குற்றச்சாட்டுக்கள் சந்தேகநபர் மீது சுமத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 25 ஆம் திகதி அவர்கள் கடத்தப்பட்டிருந்த நிலையில் தாக்குதல் நடத்தியமை, சித்திரவதை உள்ளிட்ட துன்புறுத்தல்களைப் புரிந்துவிட்டு கடத்தியவர்கள் தப்பிச் சென்றிருந்தனர்.

கடத்தப்பட்ட பெண்ணினுடைய மகளின் காதல் விவகாரமே கடத்தலுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

அவர்கள் பொலிஸாருக்கு கடத்தல் தொடர்பில் முறையிட்டுள்ளனர். அவர்களின் வாக்குமூலத்திலிருந்து நெல்லியடியைச் சேர்ந்த ஒருவரே கடந்த 27ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார். தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடத்தலில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் ஏனைய நபர்கள் தொடர்பிலும் விசாரணை நடத்தி அவர்களைக் கைதுசெய்து அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த - 26)

## முன்னாள் பொலிஸ்மா அதிபர் காலமானார்



கொழும்பு, ஏப். 30
முன்னாள் பொலிஸ்மா அதிபர் மஹிந்த பாலசூரிய காலமானார் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இலங்கையின் 33 ஆவது பொலிஸ்மா அதிபரான இவர், இறக்கும்போது வயது 68.

ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க கொலை உட்பட பல குற்றச்செயல்களுக்கு உடந்தையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் ஓய்வுபெற்ற பின்னர், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி, வாக்குமூலம் பெற்றிருந்தனர். (தஇ)


## வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளரின் பதவி பறிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்கு உட்பட்ட வல்வெட்டித்துறை நகர சபையின், தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் இருவரின் பதவிகள் வறிதாக்கப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளதால், கட்சி விடுத்த கோரிக்கைக்கு அமைய அவர்களின் பதவிகள் வறிதாக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அறிவித்துள்ளார் என்று குறித்த உறுப்பினர்கள் தெரிவித்தார். (த26)

# மரண அறிவித்தல்

## திரு. ஆசீர்வாதம் ஸ்பம்பதி



கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வெள்ளாம் போக்கட்டி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் ஸ்பம்பதி நேற்று (29.04.2021) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் மற்றும் மரியம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், காலஞ்சென்ற தங்கராசா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயாதேவியின் அன்புக் கணவரும், ஸ்பரீனா (ஆசிரியர்), ஸ்ரனிலாஸ், ஸ்ரனிஸ்ராஜ் (ஜென்சன் - லண்டன்), ஸ்வர்ணகா ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாவதியின் அன்பு மாமனும், பிரான்சிஸ்சேவியர் (பிரான்ஸ்), இருதயநேசன் (ஜேர்மனி), அருள்நேசம் (ஜேர்மனி), ஜெயநேசம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான சண்முகராசா (Building Contractor), செல்வராசா (Building Contractor) மற்றும் தங்கராணி, தங்கவேல், தவராசா (கொழும்பு), நேசராசா (கனடா), சுசீலாதேவி, மதனராசா, ஆகியோரின் மைத்துனரும், அனிஸ்ரனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (30.04.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அல்லாரை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம்
01.03.1957

மறைவு
29.04.2021

**வெள்ளாம் போக்கட்டி,**
**கொடிகாமம்.**

தகவல்:
**நேசன் (மைத்துனர்- கனடா)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றியெரிந்தது வர்த்தக நிலையம்

## உரிமையாளர் படுகாயம்

## அருகிலிருந்த கடைகளுக்கும் தீப் பரவல்

முல்லைத்தீவு, ஏப். 30

**சிறிய வர்த்தக நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீப் பரவலால், கடை உரிமையாளர் எரிகாயங்களுக்கு உள்ளாகி முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.**

அந்தக் கடையுடன் இணைந்திருந்த மற்றும் இரண்டு கடைகளுக்கும் தீப் பரவல் ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முத்தையன்கட்டு 'எல்.வி' சந்திப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்றது.

குறித்த வர்த்தக நிலையத்தில் எரிபொருளும் விற்பனை செய்யப்படும் நிலையிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது. பெரியண்ணா என அழைக்கப்படும் செ.அரிராசசிங்கம் (வயது - 72) என்பவரே தீ விபத்தில் படுகாயமடைந்துள்ளார்.



வர்த்தக நிலையத்துக்கு அருகிலிருந்த வாய்க்காலில் இருந்து இளைஞர்கள் தண்ணீர் அள்ளி ஊற்றி தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இராணுவத்தினரும் பவுசர் மூலமாக தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த13,19)

## முதியவரைக் காணவில்லை வீட்டில் குருதிக் கறைகள்

### கோவிலாக்கண்டியில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஏப். 30

வீட்டில் தனித்திருந்த குடும்பத்தலைவர் ஒருவர் காணாமல் போயுள்ளார். அவர் தங்கியிருந்த வீட்டின் சுவர் மற்றும் நிலத்தில் குருதிக் கறைகளும் காணப்படுகின்றன. இனந்தெரியாதோர் அவரைத் தாக்கி கடத்திச் சென்றுள்ளனர் என்று அவருடைய குடும்பத்தினர் கூறுகின்றனர்.

தென்மராட்சி கோவிலாக்கண்டியைச் சேர்ந்த சதாசிவம் நாகராசா (வயது-72) என்பவரே இவ்வாறு காணாமற்போயுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இரவு அவர் காணாமற்போயுள்ளார். இதுவரை அவரைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அவருடைய உறவினர்கள் அவரைத் தேடி வருகின்றனர். இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. குற்றச்செயல் இடம்பெற்ற வீட்டில் பதிவாகியிருந்த குருதிக் கறை மற்றும் தடயங்களைப் பொலிஸார் சேகரித்துச் சென்றுள்ளனர்.

மனைவி பிள்ளைகளுடன் வசிக்கும் அவர், இரவில் அருகிலுள்ள வீட்டில் தனியாக உறங்குபவர். வழமை போன்று கடந்த திங்கட்கிழமையும் அவர் உணவுப் பொதியுடன் குறித்த வீட்டுக்குச் சென்றுள்ளார். மறுநாள் காலை அவரைக் காணவில்லை என்று குறித்த வீட்டுக்குச் சென்றுபார்த்தபோதே குருதிக் கறைகள் பதிவாகியிருந்தன. அவர் இதுவரை கண்டறியப்படவில்லை. பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த)

## வேகக்கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்து

வலி. தென்மேற்கு, ஏப். 30



புதுக்குடியிருப்பு பகுதியில் உந்துருளி ஒன்று மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அந்த உந்துருளியில் பயணித்த இளைஞர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் புதுக்குடியிருப்பு மேற்கு உலகளந்த பிள்ளையார் கோவில் வீதியில் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் முத்தையன்கட்டு பகுதியைச் சேர்ந்த எஸ்.எஸ். ரீபன் (வயது-27) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

வீதியில் இருந்து அதிக உயரமாக அமைக்கப்பட்டுள்ள பாலம் ஒன்றை கடந்தபோது கட்டுப்பாட்டை இழந்த உந்துருளி வீதி அருகே இருந்த மின் கம்பம் ஒன்றுடன் மோதியதால் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த இளைஞனை வைத்தியசாலையில் சேர்க்கும் நோக்கில் 1990 அம்புலன்ஸ் சேவைக்கு அழைப்பை ஏற்படுத்தியபோதும், சேவை நிலையத்தில் இருந்து அழைப்புக்கு பதிலேதும் கிடைக்காத நிலையில் அயலவர்கள் தனியார் வாகனம் ஒன்றின் மூலம் குறித்த இளைஞனை புதுக்குடியிருப்பு பிரதேச மருத்துவமனையில் சேர்த்துள்ளனர். அங்கிருந்து குறித்த இளைஞன் மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்தில் அந்த நபர் பயணித்த மோட்டார் சைக்கிள் கடும் சேதத்துக்கு உள்ளானது என்று தெரிவிக்கப்பட்டது. (த115)

## பள்ளிவாசல்களில் இனிமேல் கூட்டுச் செயற்பாடுகள் நிறுத்தம்

கொழும்பு, ஏப். 30

இலங்கையிலுள்ள அனைத்துப் பள்ளிவாசல்களிலும் கூட்டுச் செயற்பாடுகளை மறு அறிவித்தல் வரும் வரையில் இடைநிறுத்துமாறு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

நாட்டில் கொரோனா பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்தே இவ்வாறு வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது.

அனைத்துப் பள்ளிவாசல்களினதும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் புதிய வழிகாட்டல்களை வழங்கியுள்ளது.

இதனடிப்படையில், கூட்டுத் தொழுகை, ஜும்ஆ தொழுகை போன்றவற்றை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது.

25 பேர் எனும் உச்ச வரம்புடன் ஐந்து நேர தொழுகையை நடத்துமாறும் குறித்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள பள்ளிவாசல்களை மூடுமாறும், அரசின் கொரோனாத் தடுப்பு வழிகாட்டல்களை முழுமையாகப் பின்பற்றுமாறும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் முஸ்லிம்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (த22)

## உப தபால் அலுவலகங்கள் திறக்கும் நேரத்தில் மாற்றம்

கொழும்பு, ஏப். 30

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையால் உப தபால் அலுவலகங்களைத் திறக்கும் நேரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்று தபால்மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், உப தபால் அலுவலகங்கள் முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை மாத்திரமே திறந்திருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

இதற்கு முன்னர், உப தபால் அலுவலகங்கள் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை திறக்கப்பட்டன.

இதேவேளை, சனிக்கிழமை தோறும் உப தபால் அலுவலகங்கள் காலை 9 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை மாத்திரமே திறக்கப்படும் என்றும் தபால்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (த22)

## தரம் 5பரீட்சையின் மீள்திருத்த பெறுபேறுகள் வெளியாகின

கொழும்பு, ஏப். 30

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் மீள் திருத்த பெறுபேறுகள் இணையத்தில் நேற்று வெளியிடப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி. சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

மீள் திருத்தப் பெறுபேறுகளை, www.doenets.lk/examresults என்ற முகவரியில் சென்று பார்வையிடலாம். (த)

## கீரிமலை அந்தியேட்டி கிரியையில் மூவருக்கே அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாணம் கீரிமலை புனித தீர்த்தக் கேணியில், அந்தியேட்டிக் கிரியைகள் மேற்கொள்வதற்கு ஆளணி மட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று அதிகரிப்புக் காரணமாக குறித்த கிரியைகளின் போது 3 தொடக்கம் 5 பேர் மாத்திரமே பங்கேற்கலாம் என்று வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சுகிர்தன் தெரிவித்தார். (த26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்கள் அதிகளவு அடையாளம் காணப்படும் இடங்கள் மட்டும் முடக்கம்!

## நாட்டை முடக்கினால் பொருளாதாரம் வீழ்ந்துவிடும் என்கிறார் பாதுகாப்பு செயலர்



கொழும்பு, ஏப். 30
கொரோனாத் தொற்றின் தீவிரத்தால் நாட்டை முழுமையாக முடக்குவதற்கு எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் கமால் குணரட்ண தெரிவித்தார்

ஆனால், கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்படும் பிரதேசங்கள் முடக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். பாதுகாப்பு அமைச்சில் நேற்று வியாழக் கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; கொரோனாத் தொற்று நிலைமையில் நாட்டை முழுமையாக முடக்கினால் பொருளாதார ரீதியில் நாடு வீழ்ந்து விடும்.

இதனால் நாட்டை முடக்காது கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவே அரசு முயற்சிக்கும்.

இதேவேளை, மருத்துவமனைகளில் ஏற்படக் கூடிய இடப்பற்றாக்குறையைக் கருத்தில்கொண்டு இராணுவத்தால் ஆயிரத்து 500 கட்டில்களைக் கொண்ட சிகிச்சை நிலையங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன - என்றார். (ஒ.22)

## மேலும் 6 கிராம அலுவலர் பிரிவுகள் முடக்கப்பட்டன

கொழும்பு, ஏப். 30
திருகோணமலை மாவட்டத்தில் மேலும் 6 கிராம அலுவலர் பிரிவுகள் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுமேதகம்புர, மூடோவி, லிங்க நகர், கோவிலடி, காவட்டிகுடா, சீனன்குடா ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

நாட்டில் கடந்த 22 ஆம் திகதி முதல் நேற்றுக் காலை வரை 29 கிராம அலுவலர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன என்று கொரோனா வைரஸ் தடுப்பு செயற்பாட்டு மையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்டத்தில் 4 கிராம அலுவலர் பிரிவுகளும், களுத்துறை மாவட்டத்தில் 4 கிராம அலுவலர் பிரிவுகளும், கம்பஹா மாவட்டத்தில் 4 கிராம அலுவலர் பிரிவுகளும், திருகோணமலை மாவட்டத்தில் 8 கிராம அலுவலர் பிரிவுகளும், மொனராகலை மாவட்டத்தில் 4 கிராம அலுவலர் பிரிவுகளும், காலி மாவட்டத்தில் 2 கிராம அலுவலர் பிரிவுகளும், மாத்தளை மாவட்டத்தில் 3 கிராம அலுவலர் பிரிவுகளும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. (ஒ.44)

## 'பல்கலைக்கழகமும் சமூகமும்' இணையவழி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 30
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆசிரியர் சங்கம் 'பல்கலைக்கழகமும் சமூகமும்' எனும் கருப்பொருளிலாலான உரையரங்கத்தை நாளை சனிக்கிழமை மாலை 7 மணிக்கு இணையவழியூடாக நடத்துகின்றது.

இந்த உரையாடல் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவரும் மெய்யியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான ந.சிவகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சமகால தமிழர் அரசியலில் புத்திஜீவிகள் மற்றும் கல்வியியலாளர்களின் வகிபங்கு எனும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர்களான நிலாந்தன் மற்றும் நிக்ஸன் ஆகியோர் பங்கேற்று தமது கருத்துரைகளை பகிரவுள்ளனர்.

இலணயவழி சூம் செயலியில் 828 322 6454 எனும் அடையாளத்தரவூடாக இணைந்து கொள்ளலாம். (ம)

## மருத்துவமனைகளாக மாறும் தனிமைப்படுத்தல் நிலையங்கள்

கொழும்பு, ஏப். 30
கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் பட்சத்தில், அரசால் நிர்வகிக்கப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்கள், அவசர தேவைகளிப்போது இடைக்கால மருத்துவமனைகளாக மாற்றப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

தனிமைப்படுத்தல் நிலையங்களில் தற்போது 12 ஆயிரம் பேர் வரை பராமரிப்பில் இருக்கின்றனர். அவர்களை பராமரிப்பதென்பதே சவாலுக்குரியது. தனிமைப்படுத்தல் நிலையங்கள் இடைக்கால மருத்துவமனைகளாக மாற்றப்படும்பட்சத்தில், வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை அழைத்துவரும் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, கம்பஹா மாவட்டத்தில் இடைக்கால மருத்துவமனை அமைக்கப்படும் என்று மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் தெரிவித்தார். சுமார் 2 ஆயிரம் பேருக்கு சிகிச்சையளிக்கும் வகையில் குறித்த மருத்துவமனை படையினரின் உதவியுடன் நிறுவப்படும் எனவும் அவர் கூறினார். (ஒ.44)

## சமூக வலைத்தளங்களில் போலித் தகவல்களைப் பதிவிட்ட குற்றச்சாட்டில் இளைஞர் கைது!

கொழும்பு, ஏப். 30
சமூக வலைத்தளங்களில் போலித் தகவல்களைப் பதிவிட்ட குற்றச்சாட்டில் 19 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்றுமுன் தினம் புதன்கிழமை இரவு கம்பளை பிரதேசத்தில் வைத்து குறித்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும் வகையிலான பொய்யான தகவல்களைப் பரப்புவது தண்டனைக்குரிய குற்றம் எனவும், அதன் அடிப்படையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஒ.22)

## மேல் மாகாணத்தில் கொரோனா தாண்டவம்!

கொழும்பு, ஏப். 30
மேல் மாகாணத்தில் கடந்த ஒக்ரோபர் 4ஆம் திகதி முதல் நேற்றுக் காலைவரை 61ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்றியுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் 33 ஆயிரத்து 983 பேருக்கும், கம்பஹா மாவட்டத்தில் 20 ஆயிரத்து 68 பேருக்கும், களுத்துறை மாவட்டத்தில் 7 ஆயிரத்து 453 பேருக்கும் இந்த வைரஸ் பரவியுள்ளது. கொழும்பு மாவட்டத்தில் 228 வைரஸ் தொற்றாளர்களும், கம்பஹா மாவட்டத்தில் 209 தொற்றாளர்களும், களுத்துறை மாவட்டத்தில் 133 வைரஸ் தொற்றாளர்களும் நேற்றுமுன்தினம் மாத்திரம் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஒ.44)





தாயகம் அறக்கட்டளை நம்பிக்கை நிதியத்தால் யாழ்ப்பாணம் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியசாலை மாணவர்களுக்கும், யாழ்ப்பாணம் வறுத்தலைவிளான் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களுக்கும் காலணிகள் மற்றும் சீருடைகள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம)

## திருமண ஜோடிகள் உட்பட மூவருக்குத் தொற்று உறுதி

### 125 பேர் தனிமைப்படுத்தலில்

பதுளை, ஏப்.30
பதுளையில் திருமண நிகழ்வொன்றில் மணமகன், மணமகள் மற்றும் மணமகளின் தாய் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவர்கள் மூவரும் பிந்துனுவெவ மற்றும் ககாகொல்லை கொரோனாத் தொற்று சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பதுளைக்கு அண்மித்த எல்ல பகுதியின் பிரபல உல்லாச விருந்தகமொன்றில் கடந்த 27ஆம் திகதி திருமண நிகழ்வொன்று இடம்பெற்றது. எல்ல பகுதியில் கொரோனாத் தொற்று மிகவும் தீவிரமாக இருந்து வருவதால், எல்ல பொது சுகாதாரப் பிரிவினர் திருமண நிகழ்வுக்குச் சென்று, குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர். அப் பரிசோதனை மற்றும் அறிக்கைகளின் படி, மணமகன், மணமகள் மற்றும் மணமகளின் தாய் ஆகியோருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில், திருமண நிகழ்வில் கலந்து கொண்ட 125 பேரும், சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (வ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கொரோனாவை வைத்து வாழ்தல்

கோயில் திருவிழாவில் கொரோனாப் பெருந்தொற்றுக்கால நடைமுறைகளைப் பின்பற்றாததால், ஆலயமொன்றின் நிர்வாக சபையின் தலைவரும், செயலாளரும் கைதாகி விடுவிக்கப்பட்ட விவகாரத்தில் நிகழ்ந்த பாரபட்சம் குறித்து இந்தப் பகுதியில் நேற்று விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தோம். கிட்டத்தட்ட அதன் நீட்சியாக இன்னும் சில விடயங்களைச் சொல்லும் நிலை உண்டாகியிருக்கின்றது.

நாட்டில்தினமும் கொரோனாவால்பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை ஏறிக்கொண்டே போகின்றது. முன்னரெல்லாம் நாளொன்றுக்கு 100 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதியானாலேயே பெரும் பதற்றம் ஏற்பட்டிருந்தது. ஆனால், தற்போது ஆயிரத்தையும் தாண்டிய எண்ணிகையான தொற்றாளர்கள் தினமும் இனங்காணப்படுகின்ற போதும், அது ஒரு சர்வசாதாரண நிகழ்வாகக் கடந்து செல்லும் மனோநிலை வந்துவிட்டது. அரசாங்கமும் சரி, மக்களும் சரி கொரோனாவை ஒழிப்பதை விடவும் அதனோடு வாழப்பழகுவதில் அதிக ஆர்வம் காட்டுவதாலேயே இந்த நிலை. 'நாட்டை முடக்குங்கள்' என்று பல தரப்பினரும் கடந்த சில மாதங்களாக விடுத்த கோரிக்கையை முன்னரே சாதகமாகப் பரிசீலித்திருந்தால், இவ்வளவு தூரம் கொரோனா விஸ்வரூபமெடுத்திருக்க முடியாது. சில விடயங்களில் பட்டுத்தெளிந்த பின்னராவது புத்தி வந்து, வெள்ளம் வந்த பின்னரேனும் அணை கட்டுவார்கள். ஆனால் இலங்கையிலோ வெள்ளம் வந்து குடிமுழுகிப் போகும் நிலை வந்த பின்னும், அரசாங்கம் அணை கட்டுவதாகத் தெரியவில்லை. மாறாக இன்னும் கொரோனா பரவுவதற்காக தனது காரியங்களிலேயே கண்ணாக இருக்கின்றது.

சுகாதார நடைமுறைகளை மீறி ஆலயத் தேர்த்திருவிழாவை நடத்தினார்கள் என்பதற்காகவே யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து ஆலயமொன்றின் நிர்வாகத்தினர் (தலைவரும், செயலாளரும்) பொலிஸாரால் கைதாகி விடுவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அங்கு கூடியோரை விடவும் அதிகள்விலானோர் ஒன்றுகூடும் வகையில் தேசிய வெசாக் தின ஏற்பாடுகள் நயினாதீவில் களைகட்டத் தொடங்கி விட்டன. கோயில் திருவிழாக்களிலாவது அந்தந்த ஊர்மக்களே கலந்துகொள்வர். ஆனால் தேசிய வெசாக் கொண்டாட்டம் அப்படியல்ல. நாட்டின் பல பாகங்களிலும் இருக்கும் பௌத்த மக்களும், அரசியல்வாதிகளும் பெருமெடுப்பில் வருவார்கள். அத்தோடு தேசிய விழாவைக் காண உள்ளூர் மக்களும் அதிகளவானோர் செல்லத்தான் போகின்றனர். இப்படி பல்லாயிரக் கணக்கான மக்கள் ஒன்றுகூடுவதற்கான நிகழ்வுக்குரிய ஏற்பாடுகளை யாழ். மாவட்ட நிர்வாகத்துக்கு பொறுப்பான அதியுச்ச அதிகாரிகள் ஆராய்ந்து, முன்னெடுத்துள்ளனர்.

இந்து ஆலயத்தில் தேர்த்திருவிழா சில நூறு பேருடன் செய்வது தவறு ஆனால் பல்லாயிரக்கணக்கானோரின் பங்குபற்றுதலுடன் ஒரு தேசிய விழாவை, இந்தப் பெருந்தொற்றுக் காலத்தில் நடத்த முனைவதே நாட்டுக்கு அத்தியாவசியம் என்ற நிலைப்பாட்டிலேயே அரசு இருக்கின்றது. 'தற்போது மேதினம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாள் என்பவற்றை நடத்தவிடாமல் செய்வதற்கே, இப்போது திடீரென கொரோனா அதிகரிப்பது போலவும், நாடு முடக்கப்படப்போவது போலவும் காட்டப்படுகின்றது. பொறுத்திருந்து பாருங்கள், வெசாக் தினத்துக்கு முன்னதாக கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை கட்டுப்பாட்டுக்குள் வந்திருக்கும். அது தான் இலங்கையின் 'டிசைன்' என்கிறார்கள் ஒரு சாரார். அவர்கள் கூறுவதையும் மறுக்கமுடியாது. இல்லாவிட்டால் கொரோனா கோரக்கூத்து ஆடுகின்ற நிலையில், வெசாக் தினத்தை தேசிய ரீதியில் பிரமாண்டமாக கொண்டாடுவது எப்படி என்று எவராவது திட்டம் போடுவார்களா? நாடே எரிகையில் பிடில் வாசிப்பது யோசிப்பது போலத்தான் இந்தச் செய்கையை நோக்க வேண்டியுள்ளது.

கொரோனாவை வைத்து அரசியல் செய்வது எப்படி என்பதை இலங்கையை விட வேறெந்த நாடும் சிறப்பாகப் போதிக்க முடியாது. கொரோனாவோடு வாழப்பழகுங்கள் என்று சொல்லிவிட்டு, கொரோனாவை வைத்து வாழ்கிறது அரசாங்கம். இலங்கை உண்மையிலேயே ஆசியாவின் ஆச்சரியமே.




# சீனாவுடன் நெருக்கமாக பணியாற்றவே விருப்பம்

## சீனப் பாதுகாப்பு அமைச்சரிடம் எடுத்துரைத்தார் பிரதமர் மஹிந்த

**கொழும்பு, ஏப். 30**

**சீனாவுடன் மேலும் இணைந்து நெருக்கமாகப் பணியாற்றவே இலங்கை விரும்புகின்றது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கு வருகை தந்திருந்த சீனப் பாதுகாப்பு அமைச்சர், பிரதமர் மஹிந்த ராஜபக்சவை நேற்றுமுன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் பிரதமரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

முதலில், இந்த ஆண்டு இடம்பெறவுள்ள சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 100ஆவது ஆண்டு நிறைவு மற்றும் அதன் அனைத்து சாதனைகளுக்கும் எனது அன்பான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

சீன அரசு சுமார் 100 மில்லியன் கிராமப்புற மக்களை வறுமையிலிருந்து மீட்டுள்ளது. மறுபுறம், வறுமையை ஒழிக்கும் அமெரிக்காவின் உலகளாவிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை 10 ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவால் அடைய முடிந்தது.

கொரோனாத் தொற்றுநோயைத் தடுப்பதற்கான ஒரே வழி தடுப்பூசி மட்டுமே என்பது தற்போது உலகளாவிய ரீதியில் தெளிவாகியுள்ளது. இலங்கையர்களுக்காகவும் சீனா 6 லட்சம் சைனோஃபோர்ம் தடுப்பூசிகள் மற்றும் சுகாதார பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றை தாராளமாக நன்கொடையாக வழங்கியிருந்தமையைப் பாராட்டுகிறேன். இந்த தொற்றுநோயைக் கையாள்வதில் சீன அரசின் தொடர்ச்சியான ஆதரவை எதிர்பார்க்கிறோம்.

கடந்த சில வாரங்களில் கொவிட் -19 தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தபோதிலும், நாட்டின் பொருளாதார மற்றும் சமூகத்தாக்கத்தை கருத்திற்கொண்டு முழு நாட்டையும் முடக்காதிருப்பதற்கு அரசு என்ற ரீதியில் நாங்கள் தீர்மானித்துள்ளோம். தொற்றுநோய்க்கு பிந்தைய நிலைமைக்கு முகம்கொடுப்பதற்கு இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டும் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன்.

இந்தப் பயணம் தொடர்பில் மீண்டுமொரு முறை நன்றி தெரிவிப்பதுடன், தொற்றுநோயால் ஏற்படும் சவால்களை சமாளிப்பதற்கு தற்போதுள்ள ஒத்துழைப்பை மேம்படுத்திக் கொள்வதற்கும், உங்களுடனும் உங்கள் அரசுடனும் நெருக்கமாக தொடர்ந்து பணியாற்ற எதிர்பார்க்கின்றேன் - என்றுள்ளது. (ஒ.இ)



## சீனாவைத் தொடர்ந்து இந்தியத் தூதரும் சந்திப்பு

கொழும்பு. ஏப். 30

கொழும்புத்துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டவரைவு தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ள நிலையில், சீனப் பாதுகாப்பு அமைச்சரை பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் சந்தித்திருந்தனர். இந்த நிலையில் நேற்றுக்காலை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாகலே, பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையிலான அமைச்சர் குழாமைச் சந்தித்துள்ளார். (ஒ.இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை முடக்காவிட்டால் ஏற்கும் இந்தியாவின் நிலையே

## பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு, ஏப். 30**

**நாடு அச்சுறுத்தலான நிலைமையிலேயே தற்போது காணப்படுகின்றது. இதனை உரியவகையில் முகாமை செய்யாவிட்டால் இந்தியாவின் நிலைமை இங்கும் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே, தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையும்வரை முழு நாட்டையும் முடக்குவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பொதுச் சுகாதார அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கோரிக்கை விடுத்தார்.**

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்று அதிகரிக்கும் அபாயம் இருப்பதால் குறைந்த பட்சம் பயணக் கட்டுப்பாடுகளையாவது விதிக்குமாறு நத்தார் பண்டிகைக்கு முன்னரும், தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னரும் எமது சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது. எனினும்,அரசில் கொள்கை ரீதியில் தீர்மானம் எடுப்பவர்கள் இதனைச் செவிமடுக்கவில்லை. சுகாதாரத் துறையினரின் கோரிக்கையின் அடிப்படையில் அல்லாமல் பொருளாதார துறையில் இருந்து பிரயோகிக்கப்படும் அழுத்தங்களின் அடிப்படையிலேயே தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, தற்போது ஏற்பட்டுள்ள இந்நிலைமைக்கு பொதுமக்கள் 50 வீதமும், சுகாதார அமைச்சு உட்பட கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுக்கும் தரப்பினர் 50 வீதமும் பொறுப்புக்கூறவேண்டும். புத்தாண்டுக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட விருந்துகள், புத்தாண்டுக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலாக்கள், தொழிற்சாலை மற்றும் ஆன்மிக நிகழ்வுகள் போன்ற நான்கு காரணங்களாலேயே தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது.

தொடர்ந்தும் 3 நாள்களுக்கு தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தை தாண்டுமானால் நாடு நிச்சயம் முடக்கப்படவேண்டும். தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு, தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைவடையும் வரை முடக்கம் அவசியம். அவ்வாறு இல்லாவிட்டால் நிலைமை எம் கையைமீறிச் சென்றுவிடும். இந்தியாவின் நிலைமை இங்கும் உருவாகிவிடும்.

பொருளாதாரத்தை மட்டும் அடிப்படையாக வைத்து தீர்மானம் எடுக்கமுடியாது. நாட்டு மக்களின் உயிர்ப் பாதுகாப்பும் முக்கியம். தீர்க்கமான நாள்களையே நாம் கடந்து கொண்டிருக்கின்றோம். பொதுமக்களும் பொறுப்புடன் செயற்படவேண்டும். சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் - என்றார். (ஒ.44)

---

## மன்னார் நானாட்டானில் ஒருவருக்கு கொரோனா

மன்னார், ஏப். 30

மன்னார், நானாட்டான் பிரதேசத்தில் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மின்சார சபையில் பணிபுரியும் இளைஞர் ஒருவருக்கே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து அவருடன் தொடர்பைப் பேணியவர்கள் அடையாளம் காணப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ம-213)

---

# மருத்துவக் கட்டமைப்பு எந்த நேரத்திலும் சரியலாம்

## பொறுப்புடன் நடப்பது அவசியம் என்கிறார் மருத்துவர் அபேகோன்

கொழும்பு, ஏப். 30

இலங்கையின் சுகாதாரத்துறையின் சிறப்பான நிலைமை காரணமாக கொரோனாவால் உயிரிழப்போரின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. ஆனால் இது எந்த நேரத்திலும் சரி, கீழே விழக்கூடும். பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை இறுக்கமாகப் பேண வேண்டும். இவ்வாறு உலக சுகாதார நிறுவனத்தின் கொரோனா தொடர்பான தென்கிழக்காசிய வலயத்துக்கான சிறப்புத் தூதுவர் மருத்துவ நிபுணர் பாலித்த அபேகோன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தற்போதுள்ள நிலைமையில் நாம் கவனமாக இருக்கவேண்டும். சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றத் தவறினால் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், உயிரிழப்புக்களும் அதிகரிக்கலாம்.

மக்கள் ஒன்றுகூடுவதைத் தடுத்தல், வேலையாள்களின் எண்ணிக்கையைக் குறைத்தல், பாடசாலைகளை மூடல் உள்ளிட்ட விடயங்களைச் செயற்படுத்தியதன் ஊடாக கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளது.

சுகாதார நடைமுறைகளை மக்கள் தொடர்ந்தும் கடைப்பிடித்தால் நாட்டை முடக்குவதற்கான தேவையே எழாது. - என்றார். (ஒ.இ)

---

# 12 இடங்களில் சோதனை

மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுவோர் மற்றும் மேல் மாகாணத்துக்குள் உள்நுழைவோர் மற்றும் மேல் மாகாணத்துக்குள் பிரவேசிப்போரை எழுந்தமானமாக அன்டிஜென் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை முதல் மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறும் மற்றும் மேல் மாகாணத்துக்குள் உள்நுழையும் 12 இடங்களை மையப்படுத்தி, அன்டிஜென் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொச்சிக்கடை, தோப்புவ, கொட்டதெனியாவ பட்டல்கம, நிட்டம்புவ ஹெலகல சந்தி, நீர்கொழும்பு, தொம்பே சமனபெத்த, ஹங்வெல்ல வனஹாகொடை, அளுத்கம பெந்தர, தினியாவல சந்தி, இங்கிரிய கெட்டகெதல்ல, பதுரெலிய கலவானை சமன் தேவாலயம் அருகில், மீகஹாதென்ன அவித்தாவ மற்றும் தெற்கு அதிவேக வீதியின் வெளியேறும் நுழைவாயிலுக்கு அருகிலும் இவ்வாறு எழுந்தமானமாக அன்டிஜென் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஒ.22)

---

யாழில்

# திரையரங்குகளை திறக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 30

யாழ்ப்பாண மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள திரையரங்குகளைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திரையரங்கின் மொத்த இருக்கையின் 25 சதவீதமானவர்களை மாத்திரமே அனுமதிக்க முடியும் என்ற நிபந்தனையுடன் இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ்ப்பாண நகரின் மையப் பகுதி முடக்கப்பட்ட சில நாள்களில் குடாநாட்டிலுள்ள திரையரங்குகளும் மூடப்பட்டன. அவற்றைத் திறப்பதற்கு அனுமதிக்குமாறு திரையரங்க உரிமையாளர்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஓ.5,26)

---

# கொவிட் தொற்றை ஒழிக்க ஒத்துழைப்பு வழங்குங்கள்

## திருமலை மாவட்டச் செயலர் மக்களிடம் வேண்டுகோள்



திருகோணமலை, ஏப்.30

கொவிட் பரவலை ஒழிக்க மக்கள் அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என திருகோணமலை மாவட்ட மாவட்டச் செயலர் சமன் தர்சன பாண்டிகோர்ள தெரிவித்தார்.

நேற்றையதினம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் சில தினங்களாக கொவிட் தொற்றாளர்கள் பலர் இனங்காணப்பட்டு வரும் நிலையில், தொடர்ந்து சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. முடக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மக்கள் இச் சந்தர்ப்பத்தில் அநாவசிய பயணங்களைத் தவிர்த்து வீடுகளிலே தங்கியிருப்பதுடன் சுகாதார நடைமுறைகளைப் பேணுதல் பிரதான மானதாகும். முகக்கவசமின்றி பொறுப்பற்ற முறையில் செயற்படுபவர்களுக்கு எதிராக பொலிஸ் மற்றும் சுகாதாரத் துறையினரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ந-40)

---

# தீவிர சிகிச்சைப் பிரிவின் கட்டில்கள் நிரம்பியுள்ளன

கொழும்பு, ஏப். 30

கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட தீவிர சிகிச்சைப் பிரிவின் படுக்கைகள் நிரம்பி விட்டன என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இதுவரை பயன்படுத்தப்படாத மருத்துவமனைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளைக் கொரோனா நோயாளிகளுக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் உள்ள மருத்துவமனைகளின் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் உள்ள படுக்கைகளில் ஒரு பகுதி மட்டுமே இதுவரை கொரோனா நோயாளிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டிய அவர், அனைத்துப் படுக்கைகளையும் கொரோனா நோயாளிகளுக்கு ஒதுக்குவதன் மூலம் நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க முடியும் எனவும் மேலும் தெரிவித்தார். (ஒ.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகஇடைவெளி, முகக்கவசம் விதி மீறினால் ரூ 10,000 தண்டம்

கொழும்பு, ஏப். 30

**கொரோனாத் தொற்றுப் பரவல் நாட்டில் அதிகரித்து வரும் நிலையில் தனிமைப் படுத்தல் சட்டத்தை மீறுபவர்களுக்கு 10 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 6 மாதங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது: முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல் போன்ற சட்டவிதிகளைக் கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டும். தனிமைப் படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்திலிருந்து இதுவரை 3 ஆயிரத்து 900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொரோனாத் தொற்றால் முடக்கப் பட்ட பகுதிகளில் இருப்பவர்கள் அத்தியாவசிய தேவையின்றி அங்கிருந்து வெளியேற முடியாது. இதனை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

தனிமைப்படுத்தல் விதிகளைக் கண்காணிக்க சிவில் உடையிலும் பொலிஸார் களமிறக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ஒ.இ)

## மட்டுப்படுத்தப்பட்டன தூதரக சேவைகள்

கொழும்பு, ஏப். 30

இலங்கையில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில், தூதரக விவகாரப் பிரிவு வழங்கும் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அவசர அல்லது உண்மையான தேவை உள்ளவர்களுக்கு மாத்திரமே தூதரக விவகாரப் பிரிவு வழங்கும் சேவைகளில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் உயிரிழப்பு சார்ந்த விடயங்கள், ஏற்றுமதி ஆவணங்கள் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய சான்றிதழ்களுக்குச் சான்றளித்தல் ஆகியவை தவிர்ந்த ஏனைய சேவைகள் முன் பதிவுகளின் அடிப்படையில் மாத்திரமே வழங்கப்படும்.

முன்பதிவுகளுக்கு, பொதுமக்கள் தூதரக விவகாரப் பிரிவை 011 2 335 942, 011 2 338 836, 0112 338 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக அல்லது அதன் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரி (consular@mfa.gov.lk) வழியாகத் தொடர்புகொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.22)

## திருமண மண்டபங்கள் வடக்கில் இயங்கலாம்

யாழ்ப்பாணம், ஏப். 30

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதியுடன் திருமண மண்டபங்கள் இயங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சாள்ஸ் தலைமையில் வடக்கு மாகாண கொரோனா நிலைமை தொடர்பான கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் பேசப்பட்ட விடயம் தொடர்பில் மாவட்டச் செயலர் க.மகேசன் கூறுகையில்,

தேசிய மட்ட சுகாதார வழிகாட்டலுக்கு அமைவாக திருமண மண்டபங்கள் இயங்கலாம்.

திருமணத்தில் கலந்துகொள்வோரின் விவரங்களை பொதுச் சுகாதாரப் பரிசோதகரிடம் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மண்டப உரிமையாளர்கள் உரிய சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டும். இந்த நடவடிக்கைகளைப் பொலிஸார் கண்காணிக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டது - என்றார். (ஒ.5.26)

## அலுவலகங்களுக்கு உள்ளேயும் முகக்கவசங்கள் மிகக் கட்டாயம்

### *பொலிஸார் அதிரடி உத்தரவு*



கொழும்பு, ஏப்.30

கொரோனா வைரஸில் இருந்து பாதுகாத்துக்கொள்ள அலுவலகங்களின் உள்ளேயும் ஊழியர்கள் கட்டாயம் முகக்கவசங்களை அணிய வேண்டும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்படி, தமது ஊழியர்கள் அலுவலகத்துக்கு உள்ளேயும் முகக்கவசம் அணிந்திருப்பதை அலுவலக மேற்பார்வையாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டியது இன்றியமையாதது எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஊழியர்கள் அலுவலகத்துக்கு உள்ளே பிரவேசிக்கும்போதே முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும் எனவும், வேலை செய்யும் முழு நேரத்திலும் அவர்கள் முகக்கவசத்தை அணிந்திருக்க வேண்டும். காரியாலயங்கள் உள்ளிட்டவற்றுக்குள் பிரவேசிக்கும் வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களும் முகக்கவசங்களை அணிந்திருப்பதை உரிமையாளர்கள் உறுதி செய்ய வேண்டும் என அவர் கோரியுள்ளார். அதுமாத்திரமன்றி, அனைத்து நிறுவனங்களதும் முகாமைத்துவமும் கொரோனா சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டியது முக்கிய கடமையாகும். அதேபோல, முகக்கவசம் அணியாதவர்களை உள்ளே அனுமதிக்கக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இதில் நிறுவனங்களுக்குள் பிரவேசிக்கும் பணியாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் உடல் வெப்பநிலை கட்டாயமாக அளவீடு செய்யப்பட வேண்டும். நாட்டில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவி வருகின்றமையால் கொரோனாக் கட்டுப்பாட்டுச் சட்டங்கள் கடுமையாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-22)

## நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்க ஆயுள்வேத பானம் அருந்துங்கள்

### *இராஜாங்க அமைச்சர் ஆலோசனை*

கொழும்பு, ஏப். 30

ஆயுள்வேத வைத்திய நிபுணர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கையின் தேசிய ஔடதங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட 'சுவதரணி' பானத்தை அருந்துமாறு, இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகசந்திப்பில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

கொரோனாத் தொற்றால் இலங்கையர்கள் உயிரிழப்பது குறைவு. பெருமளவானோர் குணமடைகின்றனர். எமது பாரம்பரிய வாழ்க்கை முறையே இதற்குக் காரணம்.

வைரஸ் தொற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள எமது முன்னோர்கள் பல வழிகாட்டல்களை வழங்கியுள்ளனர். அவற்றை நாம் பின்பற்ற வேண்டும். வைரஸ் தொற்று ஏற்படும்போது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவேண்டும். அதற்கு எமது ஆயுள்வேத வைத்திய நிபுணர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 'சுவதரணி' பானத்தை பருகினால் நல்லது, என்றார். (ஒ.இ)

## 5 ஆயிரம் ரூபா வழங்கவேண்டும் என்ற பயத்தாலேயே போக்குவரத்துக் கட்டுப்பாட்டை அரசு விதிக்கவில்லை

### *சஜித் அணி குற்றச்சாட்டு*

கொழும்பு, ஏப். 30

'இலங்கையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தீவிரமடைந்துள்ளபோதிலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகரிக்கப்படவில்லை. போக்குவரத்துக் கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை. மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்க வேண்டியேற்படும் என்ற அச்சத்திலேயே அரசு போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதிக்காமல் உள்ளது இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஷோக அபேசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

'கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு போக்குவரத்துக் கட்டுப்பாடுகளை விதிப்பதோடு பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது இலங்கையில் குறைந்தளவான பரிசோதனைகளே முன்னெடுக் கப்படுகின்றன. எவ்வாறிருப்பினும் பரிசோதனைகளில் நூற்றுக்கு இருபது வீதமானோருக்குத் தொற்று உறுதிப்படுத்தப் படுகின்றது.

இந்தியாவில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை கண்டு இலங்கை மக்கள் அச்சமடைந்துள்ளனர். இவ்வாறான நிலைமையில் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்களை தனிமைப்படுத்துவதற்கு இலங்கை முன்வந்துள்ளது. நட்சத்திரக் ஹொட்டல்களில் இவ்வாறு இந்தியர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மக்களின் வாழ்க்கைச் செலவு பெரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்க வேண்டியேற்படும் என்ற அச்சத்திலேயே போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படாமலுள்ளன.

எவ்வாறிருப்பினும் கொரோனாக் கட்டுப்படுத்தலுக்காக பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வகையில் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவுள்ளோம்' - என்றார். (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடமாற்றங்களை எதிர்த்து முறையீடு

## உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் நடவடிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 30**

**யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசனால் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்களை எதிர்த்து உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள் மேன்முறையீடு செய்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கடந்த 23ஆம் திகதிய தமது கடிதம் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 7 உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களுக்கு இடமாற்ற உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.திலீபன், காரைநகர் பிரதேச செயலகத்துக்கும், அதேவேளை காரைநகர் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி பா.ரேவதி, மருதங்கேணி பிரதேச செயலகத்துக்கும் அதேபோன்று மருதங்கேணி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி வே.கிருஸ்ணாளினி, கோப்பாய் பிரதேச செயலகத்துக்கும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ச.சர்வேஸ்வரன், யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்கும், சங்கானை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செல்வி வை.தர்சினி அந்தப் பிரதேச செயலகத்தில் நிரந்தரக் கடமையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பதில் கடமையும் என்றும், யாழ்ப்பாண மாவட்டச் செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சர்வேந்திரன், சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கும், அதேவேளை சாவகச்சேரி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு தற்காலிகமாகவும் இடமாற்றப்படுவதாக மாவட்டச் செயலர் அறிவித்திருந்தார். இதில் பெரும்பான்மையானவர்கள் இடமாற்றத்துக்கு எதிரான மேன்முறையீடு மேற்கொண்டுள்ளனர். இதில் ஒரு சில இடமாற்றங்களின் பின்னணியில் அரசியல் தலையீடுகள் இருக்கின்றன என குற்றம் சுமத்தப்படுகின்றது. மீள்குடியேற்ற அமைச்சின் வீட்டுத் திட்டப் பயனாளிகள் தெரிவில் ஒத்துழைக்க மறுத்த உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களை பழிவாங்கும் நோக்குடன் இந்த இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது.

வருடாந்த இடமாற்றத்துக்குப் புறம்பாக, திடீரென மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த இடமாற்றங்கள் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமார் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளார். அவர் தொடர்பான அமைச்சு விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஏதுவாக வேறு மாவட்டத்துக்கு அவரை இடமாற்றம் செய்யுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவுறுத்தியிருந்தது. அது தொடர்பில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சிவகுமார் மேன்முறையீடு மேற்கொண்டிருந்தார். அதற்குரிய பரிந்துரையை மாவட்டச் செயலரும் வழங்கியிருந்தார். இந்த நிலையில் விசாரணைக்கு இடையூறு ஏற்படாத வகையில் வேறு மாவட்டத்துக்கு இடமாற்றுவதற்கு மாவட்டச் செயலருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கு அமைவாக அவர் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளார். (ஒ.5)



# தமிழ்த் தேசிய அரசியல் தரகு அரசியலாகிவிட்டது

*காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தெரிவிப்பு*

வவுனியா.ஏப்.30

சிவராம் இல்லாமல் தமிழ்த் தேசிய அரசியல் தரகு அரசியலாகிவிட்டது என்று வவுனியாவில் தொடர் போராட்டத்தை மேற்கொண்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

2005 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளரும் ஆய்வாளருமான மாமனிதர் சிவராமின் 16 ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனி யாவில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது. வவுனியா வில் தொடர்போராட்டம் மேற்கொண்டு வரும் உறவு களால் குறித்த நினைவுதினம் கடைப்பிடிக்கப்பட்டது.

இதன்போது அவரது திருவுருவப் படத்துக்குத் தீபம் ஏற்றி மலரஞ்சலி செலுத்திய பின்னர் கருத்து தெரிவிக்கும்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள்மேலும் தெரிவிக்கையில்:

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை, ஜன நாயகத்துக்கும், ஊடக சுதந்திரத்துக்கும் கறை ஏற்படுத்திய தோர் நிகழ்வு. தமிழர் பூகோள அரசியலை அன்றே கணித்து உருவாக்கிய தராக்கி சிவராம் இல்லாமல் , தமிழ்த் தேசிய அரசியல் சில்லறை தரகு அரசியல் ஆகிவிட்டது - என்றனர். (ஐ-110)




# ஊடகவியலாளர் சிவராமின் 16ஆம் ஆண்டு நினைவேந்தல்

வவுனியா.ஏப்.30

மூத்த ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தின் 16 ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று வவுனியாவில் கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சு.வரதகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அன்னாரது திருவுருவப் படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

சிவராம் தொடர்பான நினைவுரையை மூத்த ஊடகவியலாளர் ந.கபிலநாத் நிகழ்த்தினார். ஊடகவியலாளர் சிவராம் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி இலங்கைத் தலைநகர் கொழும்பில் நாடாளுமன்றுக்கு அருகில் ஆயுததாரிகளால் கடத்தப்பட்டு பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். (ஐ-110)

### பாடசாலை சீருடையுடன்

# குற்றவாளிக் கூண்டில் ஏறுவது பாடசாலைக்கே இழுக்காகும்

மன்னார்.ஏப்.30

பாடசாலை சீருடை, பாடசாலையின் பெருமையை எடுத்துக்காட்டுவதாக அமைய வேண்டும். அதைவிடுத்து நீதிமன்றின் குற்றவாளிக் கூண்டுப் பக்கம் பாடசாலை சீருடையுடன் வந்து நிற்பது பாடசாலைக்கு ஒரு இழுக்காகும் என்று மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் மாணவனுக்கும் அவருடன் நின்ற தாய்க்கும் அறிவுரை வழங்கினார். மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழக்கொன்றின் போது பாடசாலை மாணவன் ஒருவர் பாடசாலைச் சீருடை அணிந்தவாறு தனது தாய் மற்றும் ஏனைய சந்தேக நபர்களுடன் குற்றவாளி கூண்டுப் பக்கம் முன்னிலையாகி இருந்தார். இதைக் கண்ணுற்ற நீதிபதி பெருமாள் சிவகுமார் மாணவனைப் பார்த்து "இங்கு பாடசாலை சீருடையுடன் வரக்காரணம் என்ன?" எனக் கேட்க, அதற்கு கூண்டுக்குள் இருந்த மாணவனின் தாயார் "பாடசாலையில் வகுப்பு நடக்கின்றது அது தான் அவர் சீருடையுடன் வருகை தந்துள்ளார்" என தெரிவித்தார். இதற்கு நீதிபதி, "பாடசாலை சீருடையானது பாடசாலைகளின் பெருமையை வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும். அதைவிடுத்து இவ்வாறு சீருடையு டன் குற்றவாளி கூண்டுப் பக்கம் நின்று பாடசாலையின் பெருமையை மழுங்கடிக்கக்கூடாது" என்று அறிவுரை வழங்கினார். (ஐ-60)

# மஞ்சள் கடத்தல்; ஐவருக்கு பிணை

மன்னார்.ஏப்.30

மஞ்சள் கடத்தலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஐவரையும் பிணையில் செல்லுமாறு மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார். கடந்த புத்தாண்டு தினத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து மன்னாருக்கு ஒரு லொறியில் நெல்லு மூடைகளுக்கு மத்தியில் ஆயிரத்து 979 கிலோ கிராம் மஞ்சளை கடத்தி வந்த குற்றச்சாட்டில் மன்னாரைச் சேர்ந்த ஐவரை இலுப்பைக் கடவை பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தியிருந்தனர். இதன்போது இவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். இந்த நிலையில் வழக்கு மீண்டும் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் சந்தேக நபர்கள் ஐவரையும் தலா இரண்டு லட்சம் ரூபா சீரப்பிணையில் செல்ல உத்தரவிட்டார். (ஐ-60)

# கொரோனா அச்சத்தால் தீயிடப்பட்டது கஞ்சா

மாதகல் கடற்பரப்பை அண்மித்த சில்லாலைப் பகுதியில் 7 பொதிகளில் கைப்பற்றப்பட்ட 240 கிலோ கேரளக் கஞ்சா தீயிட்டு எரிக்கப்பட்டது. கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக அவர்கள் மேற்கொண்ட தேடுதலின்போது 7 பொதிகளில் 240 கிலோ நிறையுடைய கேரளக் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அவர்கள் ஊடாக நீதிமன்றுக்கு அறிக்கையிடப்பட்டது. கொரோனா அச்சம் காரணமாக நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக நேற்றுமுன்தினம் குறித்த கஞ்சாப் பொதிகள் எரித்து அழிக்கப்பட்டன. (ஒ.20,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலி கால்நடைகள் பிரதேச சபையால் பிடிப்பு!



புதுக்குடியிருப்பு, ஏப்.30

புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளை பிடிக்கும் நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பிரதேச சபை ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு வீதிகளில் கட்டாக்காலிகளாக நின்ற 56 கால்நடைகள் பிரதேச சபையினரால் பிடிக்கப்பட்டு பிரதேச சபை வளாகத்தில் கட்டிவைக்கப்பட்டுள்ளன. புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் வீதிகளில் உலாவித்திரியும் கட்டாக்காலி கால்நடைகளால் விபத்துக்கள் இடம்பெற்று வருவதுடன், விவசாய செய்கைக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்நிலையில், வீதிகளில் உள்ள கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துமாறு பல தடவைகள் மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டு வந்தது. இதனடிப்படையில் நேற்று 56 மாடுகளை பிரதேச சபையினர் பிடித்துள்ளனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகளுக்கு கால்நடைகளின் உரிமையாளர்களிடம் இருந்து தண்டம் அறவிடப்படும். பெரிய மாடு ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாவும், சின்ற மாடு ஒன்றுக்க ஆயிரம் ரூபாவும் ஒருநாள் பராமரிப்புக்கு தலா இருநூறு ரூபாவும் அறவிடப்படும் என பிரதேச சபையினர் தெரிவித்துள்ளதுடன், கால்நடை வளர்ப்பவர்கள் தங்கள் கால்நடைகளை கட்டி வளர்க்குமாறும் பிரதேச சபையினர் அறிவித்துள்ளார்கள். (ந-19)

# வவுனியாவில் தொற்று நீக்கம்

வவுனியா, ஏப்.30

வவுனியா நகரின் பல பகுதிகளில் கொவிட்-19 தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நாடளாவிய ரீதியில் கொரோனாத் தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் வவுனியாவில் அதனைக் கட்டுப்படுத்தும் முகமாக இராணுவத்தினரால் தொற்று நீக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் நடமாட்டம் அதிக அளவில் காணப்படும் பகுதியான வவுனியா பஜார் வீதி, இலுப்பையடி சந்தி, மொத்த மரக்கறி விற்பனை மையம், குடியிருப்பு வீதி, ஹொரவப்பொத்தானை வீதி, புதிய பஸ் நிலையம் மற்றும் கண்டி வீதி என்பவை நேற்று காலை 8 மணியளவில் தொற்று நீக்கப்பட்டன.

குறித்த பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக நகரசபை தீயணைப்பு பிரிவினரின் உதவியுடன் தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்யப்பட்டதுடன் நடைபாதைகள் போன்றவற்றுக்கும் இராணுவத்தினரால் தொற்று நீக்கி மருந்து வீசப்பட்டது. (ச-18)



## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 12 . 1936

மறைவு 29 . 04 . 2021

### திரு. இளையதம்பி நடராசா

காடிவளை இளவாலையைப் பிறப்பிடமாகவும் பொற்கலந்தம்பையை வதிவிடமாகவும் தற்போது கோண்டாவிலை வதிவிடமாகவும் கொண்ட திரு. இளையதம்பி நடராசா நேற்று (29.04.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - விசாலாட்சி தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், விமலாதேவி, கமலாதேவி, காலஞ்சென்ற நவலோகன் மற்றும் சறோஜினிதேவி, சரஸ்வதிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், தர்மபாலன், அனுசியா மற்றும் நரேந்திரன், மணிவண்ணன் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நாகம்மா, நாகலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.04.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரி யைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்.

## ஈர விழிகளுடன் ஏழாம் ஆண்டு

### கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்



தோற்றம் 13.10.1924 மறைவு 19.04.2014


திதி:- சித்திரைமாத சங்கடஹர சதுர்த்தி
(30.04.2021)

அன்புத் தெய்வமே,
ஆண்டுகள் ஏழு போனது அம்மா,
எங்களுடன் வாழ்ந்த
அழகிய நினைவுகளும் தங்கள் அன்பும்
எம்மை வழிநடத்திச் செல்லும்
தங்களை நேரில் காண இயலாது
இருப்பினும் நீங்கள்
எப்போதும் எம்முடனே வாழ்கிறீர்கள்

மகன் குடும்பத்தினர்.

இல.140, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 03 . 1957

மறைவு 29 - 04 - 2021

### திரு. ஆசீர்வாதம் ஸ்பம்பதி

கச்சாய் வடக்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் ஸ்பம்பதி நேற்று (29.04.2021) வியாழக்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசீர்வாதம் மற்றும் மரியம்மா (பிரான்ஸ்) இன் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயாதேவியின் பாசமிகு கணவரும், பிரான்சிஸ்சேவியர் (பிரான்ஸ்), இருதயநேசன் (ஜேர்மனி), அருள்நேசம் (ஜேர்மனி), ஜெயநேசம் (லண்டன்) ஆகியோரின் நேசமிகு சகோதரனும், ஸ்பரீனா (ஆசிரியர், யா/ விடதற்பளை கமலாசனி வித்தியாலயம்), ஸ்ரனிலாஸ் (பாதுகாப்பு ஊழியர், BOC சாவகச்சேரி), ஸ்ரனிஸ்ராஜ் (ஜென்சன் - லண்டன்), ஸ்வர்ணகா (Student of Software Engineer) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாவதி (Health Assistant, Jaffna Teaching Hospital) இன் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகராசா, செல்வராசா மற்றும் தங்கராணி, தங்கவேல், தவராசா, சகுந்தலாதேவி, நேசராசா (கனடா) மதனராசா (கண்ணன் சைக்கிள் கடை), றஜிதா, சாந்தா, பவுஸ்ரீன், டயஸ் ஆகியோரின் மைத்துனரும், அனிஸ்ரனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இரங்கற் திருப்பலி இன்று (30.04.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அல்லாரை புனித செபமாலை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தீபன் - 077 163 1650 (மகன்)

தகவல்: மனைவி

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18 . 02 . 1934

மறைவு 23 . 04 . 2019

### அமரர் லெட்சுமி நல்லையா

*(திதி: 30.04.2021)*

அம்மா! நீங்கள் அளவில்லாமல் அள்ளித் தந்த அன்பையும், உங்கள் வாழ்க்கை நெறிமுறைகளையும் நினைத்துப் பார்க்கின்றோம்.
அம்மா! நீங்கள் வலிமை, தைரியம், ஆற்றல் கொண்ட ஆத்மாவாக எங்களுக்கெல்லாம் அற்புதமான முன்மாதிரியாகத் திகழ்ந்தீர்கள்.
அகிலத்தில் வாழ தன்னம்பிக்கை தந்தீர்கள்.
அம்மா! இப்பிறவி பந்தத்திலே ஆத்மார்த்தமாக எங்களை எப்போதும் ஆதரித்த உங்கள் செயல்கள் எம்மனதில் என்றும் நிழலாடுகின்றன.....
என்றும் உங்கள் நினைவில் வாழும் உங்கள் பிள்ளைகள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

238/1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
077 456 6353

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு நகரின் கழிவுகள் இரு வாரங்களில் அகற்றப்படும்

## கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு,ஏப்.30**
**முல்லைத்தீவு நகரக் கழிவுகள் பாதுகாப்பான முறையில் இரு வாரங்களில் அகற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு நகரக் கழிவுகள் பாதுகாப்பற்ற முறையில் அகற்றப்படுவதன் காரணமாக வாகனங்களில் இருந்து கழிவுகள் வீதிகளில் அடிக்கடி வீழ்ந்து கிடப்பது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
முல்லைத்தீவு நகரக் கழிவுகள் நெடுங்கேணி வீதியில் பிரதேச சபையால் கொட்டப்படுகின்றன. கழிவுகளைக் கொண்டு செல்லும் போது வீதிகளில் கழிவுகள் வீழ்ந்து கிடப்பது தொடர்பாக பொதுமக்களாலும், பிரதேச சபை அமர்வுகளில் உறுப்பினர்களினாலும் அடிக்கடி தெரிவிக்கப்பட்டாலும் பிரதேச சபையில் கழிவு அகற்றுவதற்கான வாகனப் பற்றாக்குறை காணப்படுகின்றது. மூன்று உழவு இயந்திரங்களுக்கும் தற்போது பாதுகாப்பான கூடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. 15 நாள்களில் மூன்று உழவு இயந்திரங்களும் கழிவு அகற்றலில் பாதுகாப்பான முறையில் ஈடுபடும்.
ஏனைய மாவட்டங்களில் கழிவு அகற்றுவதற்கென பெரிய வாகனங்கள் உள்ளன. ஆனால் எமது பிரதேசத்தில் வாகனப் பற்றாக்குறை காரணமாக உழவு இயந்திரங்கள் மூலம்தான் கழிவுகளை அகற்றுகின்றோம்- என்றார். (ஐ-13)



# பரீட்சார்த்தமாக செயற்பட்ட சமிக்ஞை விளக்குகள்

கொடிகாமம்,ஏப்.30
கொடிகாமம் சந்தியில் அண்மையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் பொருத்தப்பட்ட சமிக்ஞை விளக்குகள் நேற்றுமுன்தினம் பரிட்சார்த்தமாக செயற்படுத்தப்பட்டன. இதற்கான பிரதான மின் வழங்கல் ஒரு சில நாள்களில் இணைக்கப்பட்டு அடுத்த வாரமளவில் வைபவ ரீதியாக செயற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
பருத்தித்துறை வீதி கொடிகாமம் கச்சாய் வீதி ஆகியவை ஏ9 வீதியில் இணையும் கொடிகாமச் சந்திப் பகுதியில் அடிக்கடி வீதி விபத்துக்கள் இடம்பெறுவதையடுத்து தென்மராட்சி பிரதேச மக்கள், கொடிகாமம் வர்த்தக சங்கத்தினர், சாவகச்சேரி பிரதேசசபை ஆகிய தரப்புக்கள் இணைந்து கொடிகாமம் சந்தியில் வீதிச் சமிக்ஞை ஒளி விளக்கு பொருத்தப்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையினிடம் விடுத்த கோரிக்கையின் பயனாக குறித்த சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டன. குறித்த சமிக்ஞை விளக்குத் தொகுதி 90 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ- 159)

# சிறுதானியங்களின் அறுவடை நிகழ்வு!

சாவகச்சேரி, ஏப். 30
தென்மராட்சி தெற்கு பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயல்களில் பயிரிடப்பட்ட சிறு தானியப் பயிர்கள் அறுவடை நிகழ்வு நேற்று கேரதீவு அறுகுவெளிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகில் உள்ள வயலில் இடம்பெற்றது. தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி உ.சுபலிங்கம் விருந்தினராகக் கலந்து கொண்டு அறுவடையை ஆரம்பித்து வைத்தார்.
கைதடி கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில் வேர்ள்ட் விஷன் நிறுவனப் பிரதிநிதி, கமநல சேவைகள் நிலைய பெரும்போக அலுவலர், விவசாயப் போதனாசிரியர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-9)





யாழ்ப்பாணம் சாவகச்சேரி நுணாவில் கிழக்கு ஞானவைரவர் ஆலயத்தின் குடமுழுக்கு நேற்று வியாழக்கிழமை காலை பக்திபூர்வமாக சிறப்பாக இடம்பெற்றது. (ஐ-159)

# சுவாமி வெளிவீதி உலா வர சுகாதாரத்துறையினர் தடை

சாவகச்சேரி ஏப். 30
தென்மராட்சி பிரதேசத்தில் பெருந் திருவிழா மற்றும் அலங்காரத் திருவிழா நடைபெறும் கோவில்களில் சுவாமி வெளிவீதி உலா வருவதற்கு சாவகச்சேரி சுகாதார பகுதியினர் தடை விதித்துள்ளனர். அத்துடன் சுவாமி தூக்குபவர்கள் மற்றும் உபயகாரர் உட்பட 20 பேர் மட்டும் பங்குபற்ற வேண்டும் என அனுமதி வழங்கி அதனை மீறினால் தொடர்ந்து திருவிழா மேற்கொள்வது நிறுத்தப்படும் என்ற நிபந்தனையும் விதித்துள்ளனர். (ம-9)

# பறங்கி ஆற்றில் மணல் அகழ்வு

## சேதமடையும் சிறாட்டிக்குளம் முதன்மை வீதி

முல்லைத்தீவு,ஏப்.30
முல்லைத்தீவு பறங்கி ஆற்றில் தொடர்கின்ற மணல் அகழ்வால் மாந்தை கிழக்கின் சிறாட்டிக்குளம் முதன்மை வீதி சேதமடைந்துள்ளது என்று அக் கிராம மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
சிறாட்டிக் குளம் கிராமத்தில் அறுபத்தைந்து குடும்பங்கள் வாழ்கின்றன. குறித்த கிராம மக்கள் நட்டாங்கண்டல் பிரதேச மருத்துவமனைக்குச் செல்வதற்கு ஏழு கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டும். மல்லாவி ஆதார மருத்துவமனைக்குச் செல்வதாயின் 15 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டும்.
சிறாட்டிக் குளத்தில் இருந்து நட்டாங்கண்டல் செல்லும் முதன்மை வீதி பறங்கி ஆற்றில் மணல் அகழ்வில் ஈடுபட்டுள்ள டிப்பர்களால் குண்டும்குழியுமாக மாறி உள்ளது. மழை காலங்களில் இவ்வீதியில் பயணிக்க முடியாத அளவுக்கு வீதி சேதமடைந்து காணப்படுகிறது. எனவே இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதுடன், குறித்த வீதியையும் சீரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுக்கின்றோம்- என்றனர். (ஐ-13)

# அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளில் வங்கிச் சேவையை நிரந்தரமாக்கவும்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஏப்.30
கிளிநொச்சி அக்கராயன், ஸ்கந்தபுரம் கிராம அலுவலர் பிரிவுகளில் வாரந்தோறும் நடைபெறுகின்ற இலங்கை வங்கியின் நடமாடும் சேவையை நிரந்தரமாக மாற்றுமாறு இப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.
கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
கிளிநொச்சி மாவட்டத்தின் இரண்டாவது பெரிய குளமாகிய அக்கராயன் குளத்தின் கீழ் இரு போகங்களில் பயிர்ச் செய்கை நடைபெறுகின்றது. கோடிக் கணக்கில் இப்பகுதியில் பணம் பயன்படுத்தப்படும் நிலையில் தமது வங்கித் தேவைகளுக்காக இருபது கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிளிநொச்சி நகரத்துக்கே செல்ல வேண்டிய நிலையில் இப்பகுதி மக்கள் உள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தின் உப நகரம் அக்கராயன் என்பதன் காரணமாக தற்போது வாரத்தில் புதன் கிழமைகளில் இலங்கை வங்கியின் நடமாடும் சேவை ஸ்கந்தபுரத்தில் நடைபெற்று வரும் நிலையில் இச்சேவையை நிரந்தரமாக மாற்றுவதற்கான நடவடிக்கையை இலங்கை மத்திய வங்கி ஏற்படுத்த வேண்டும். அக்கராயன் மற்றும் ஸ்கந்தபுரம் பகுதியில் பாதுகாப்பான கட்டடங்கள் உள்ளன. மின்சார வசதி உள்ளது. பொலிஸ் நிலையம் உள்ளது. இந்த நிலையில் இலங்கை வங்கியின் கிளை ஒன்றை அக்கராயன் பகுதியில் இயங்க வைப்பதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அக்கராயன் பகுதியில் இலங்கை வங்கிக் கிளை இயங்கத் தொடங்கினால் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், அக்கராயன், ஸ்கந்தபுரம், கோணாவில், கண்ணகைபுரம், பூநகரியின் முக்கொம்பன், முல்லைத்தீவு மாவட்டத்தின் அமதிபுரம், ஆரோக்கியபுரம், கோட்டைகட்டியகுளம் மற்றும் அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த ஐயாயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் நன்மையடைவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-13)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இருபதாவது ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 09 – 07 – 1941

விண்ணில் 30 – 04 – 2001

சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியை பிறப்பிடமாகவும்
கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட

## திரு. பரராஜசேகரம் ஜெயராஜா
## (தேசிங்கு)

**முன்னாள் (A.M.W உற்பத்தி முகாமையாளர்
பொலிஸ் திணைக்களம் R.S.I
மகாவலி கேபிள் லிமிட்டெட் முகாமையாளர்)**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
கள்ளமில்லா வார்த்தைகள் பேசி அனைவரையும்
தன் அன்பால் கவர்ந்த உள்ளத்தால் உயர்ந்து
ஊருக்குள் மிளிர்ந்து வள்ளளுக்கு வள்ளலாய்
வாழ்ந்து காட்டி துள்ளுநடை போட்டு வந்த
உங்களைக் கள்ளமாய் வந்து காவலன் கவர்ந்து
சென்றதேனோ கலங்குகின்றோம். கண்ணீர் வடிக்கின்றோம்
நீங்கள் எம்மை விட்டு விண்ணுலகம் சென்று
இருபது ஆண்டுகள் ஆகிவிட்டது. எம் உயிர் மூச்சின்
இறுதிவரை உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்றோம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம்சாந்தி

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா பெருந்தொற்று இந்தியாவில் தாண்டவம்!

## நேற்றுமுன்தினம் மட்டும் 380,000 பேர் பாதிப்பு



இந்தியாவில் கொரோனாவால் உயிரிழந்தோரின் சடலங்கள் எரியூட்டப்படுகின்றன.

புதுடில்லி, ஏப். 30

**இந்தியாவில் நேற்றுமுன்தினம் மட்டும் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3 லட்சத்து 80 ஆயிரத்தைத் தாண்டியது. உயிரிழப்பு எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்தது. இதன்படி 3 ஆயிரத்து 647 இறப்புக்கள் நேற்றுமுன்தினம் மட்டும் பதிவாகின.**



அண்மைக்காலமாக இந்தியாவில் கொரோனாத் தொற்று தீவிரம் பெற்றுள்ளது. ஏராளம் சமூகத் தொற்றுக்கள் அங்கு பதிவாகியுள்ளன. ஒவ்வொரு நாளும் சராசரியாக 3 லட்சத்து 50 ஆயிரத்துக்கும் குறையாதோருக்குத் தொற்று ஏற்பட்டு வருகின்றது. சராசரியாக 2 ஆயிரத்து 500 பேர் இறக்கின்றனர். இந்த நிலையில் உலக சுகாதார நிறுவனத்துக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மட்டும் இந்தியாவில் 3 லட்சத்து 80 ஆயிரம் பேருக்குப் புதிதாகத் தொற்று ஏற்பட்டுள்ளது. 3 ஆயிரத்து 647 பேர் உயிரிழந்துள்ளனர். இதுவரை இந்தியாவில் ஒட்டுமொத்தமாக ஒரு கோடியே 83 லட்சத்து 68 ஆயிரம் பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். 2 லட்சத்து 4 ஆயிரத்து 812 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு கோடியே 50 லட்சத்து 75 ஆயிரம் பேர் கொரோனாவில் இருந்து மீண்டுள்ளனர். கொரோனாப் பெருந்தொற்றின் இரண்டாவது அலை இந்தியாவில் தீவிரமாகியுள்ளது. இதனால் அங்கு அடுத்த இரு வாரங்களுக்கு தொற்றுக்கள் இன்னுமின்னும் அதிகரிக்கும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# சுவிஸிலிருந்து இந்தியாவுக்கு ஒக்சிஜன் செறிவூட்டிகள்

சூரிச், ஏப். 30

ஐரோப்பிய நாடான சுவிஸிலிருந்து இந்தியாவுக்கு ஒக்சிஜன் சிலிண்டர்கள், ஒக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் இன்னபல மருத்துவ உபகரணங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை வேகமாகப் பரவி வருகிறது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வருகின்றன. இதற்கிடையில், கொரோனாவை கட்டுப்படுத்தப் போராடி வரும் இந்தியாவுக்கு உலக நாடுகள் உதவிக்கரம் நீட்டி வருகின்றன.

அந்த வகையில் சுவிட்சர்லாந்து ஏராளமான மருத்துவ உதவிகளைச் செய்துள்ளது.

இது தொடர்பாக, சுவிட்சர்லாந்து தூதரகம் வெளியிட்ட அறிக்கையில், சுவிஸ் மனிதாபிமான அடிப்படையில் இந்தியாவுக்கு பல உதவிகளைச் செய்துள்ளது. இந்த இக்கட்டான நிலையில் இந்தியாவுக்குத் துணை நிற்போம் -என்றுள்ளது. (ம)





# இந்தியாவுக்கு கனடா நிதியுதவி

ஒட்டாவா, ஏப். 30

கொரோனாவுக்கு எதிராகப் போராடிவரும் இந்தியாவுக்கு 10 மில்லியன் டொலர் நிதியுதவி வழங்குவதாக கனடா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கனடா அதிபர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்ததாவது: 'கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக இந்தியாவின் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு 10 மில்லியன் டொலர்களை வழங்குகிறோம்' என்றார். (ம)

# ஏராளமான மருந்துப் பொருள்களுடன் இந்தியா வருகின்றது ரஷ்ய விமானம்

மொஸ்கோ, ஏப். 30

கொரோனாவின் பிடியில் இந்தியா சிக்கியுள்ள நிலையில், ஏராளமான மருந்துப் பொருள்களை விமானம் மூலம் அனுப்பிவைத்துள்ளது ரஷ்யா.

கொரோனாப் பெருந்தொற்றின் முதலாவது அலைக்கு எதிராகக் கணிசமான உதவிகளை உலக நாடுகளுக்கு இந்தியா செய்திருந்தது.

இந்த நிலையில் கொரோனா இரண்டாவது அலையில் இந்தியா பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ள நிலையில், உலக நாடுகள் பலவும் இந்தியாவுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளன.

மருத்துவ அவசரத் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ரஷ்ய வானூர்திகளில் இந்தியாவுக்குத் தேவையான மருந்துப் பொருள்கள் கணிசமான அளவு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (ம)



# ஈரானியக் கப்பல்களை நோக்கி அமெ. கப்பல்கள் துப்பாக்கிச் சூடு

## பாரசீக வளைகுடாவில் பதற்றம்

தெஹ்ரோன், ஏப். 30

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நீடித்து வரும் நிலையில், அமெரிக்க போர்க்கப்பலை அச்சுறுத்தியதால், ஈரானியக் கப்பல்களை நோக்கித் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நீடித்து வருகிறது.

இது தொடர்பாக அண்மையில் இரு நாடுகளுக்கும் இடையில் மறைமுக பேச்சு நடந்தது. இந்தப் பேச்சு இணக்கமாக அமைந்ததால் தொடர்ந்து பல்வேறு கட்டப் பேச்சுக்கள் நடத்த இரு நாடுகளும் முடிவு செய்துள்ளன.

இந்த நிலையில் பாரசீக வளைகுடா பகுதியில் அமெரிக்க போர்க் கப்பல்களை அச்சுறுத்தும் வகையில் செயல்பட்ட ஈரான் கடலோர காவல்படையின் கப்பல்களை அமெரிக்க கப்பல்கள் துப்பாக்கிச் சூடு நடத்தி விரட்டியடித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து அமெரிக்க கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பாரசீக வளைகுடாவில் சென்று கொண்டிருந்த அமெரிக்காவின் யு.எஸ்.சி.ஜி.சி பரனோப் போர்க் கப்பலை அச்சுறுத்தும் விதமாக ஈரான் கடற்படையின் 3 கப்பல்கள் மிகவும் நெருக்கமாக வந்தன.

கப்பலில் இருந்த அமெரிக்க கடற்படை சிப்பாய்கள் ஒலிபெருக்கி மூலம் பலமுறை எச்சரித்தும் ஈரான் கப்பல்கள் விலகிச் செல்லாமல் நெருக்கமாக வந்து கொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. பின்னர் ஈரானிய கப்பல்கள் விலகிச் சென்றன - என்றுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனப் பாதுகாப்பு அமைச்சருக்கு இலங்கையில் கடும் எதிர்ப்பு



கொழும்பு, ஏப். 30

சீனப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்த போது மக்கள் அவருக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கொழும்பிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

கடந்த 27ஆம் திகதி இரவு சீனப் பாதுகாப்பு அமைச்சர் கட்டுநாயக்காக விமான நிலையத்தை வந்தடைந்திருந்தார். அங்கிருந்து அவர் கொழும்பு நோக்கிச் சென்றார். இதன்போது பிரதான வீதியின் இரு மருங்கிலும் முக்கிய சந்திகளில் நின்ற மக்கள் 'ஹு' ஒலி எழுப்பினர். அத்துடன் வாகனச் சாரதிகள் தமது 'ஹோர்ன்களை' எழுப்பி எதிர்ப்பை வெளிப்படுத்தினர். சீனப் பாதுகாப்பு அமைச்சரின் வாகனத் தொடரணியின் பயணத்துக்காக, பொலிஸாரால் வீதியின் இரு மருங்கிலும் மக்கள் தடுக்கப்பட்டிருந்தபோதே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. (ஒ.5)

போர்க்குற்றச்சாட்டுக்களால்

## இலங்கை நியமனத்தை நிராகரித்தது கனடா!!!

கொழும்பு, ஏப். 30

இறுதிக்கட்டப் போரின் போது போர்க்குற்றங்கள் புரிந்தார் என்று நம்பப்படும் இலங்கையின் முன்னாள் விமானப் படைத் தளபதியை தனது நாட்டுக்கான தூதுவராக ஏற்றுக் கொள்ள கனடா மறுத்துள்ளதாக 'தமிழ் கார்டியன்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரின்போது போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் எனக் குற்றம் சுமத்தப்படும் இலங்கை இராணுவத்தின் 57,58 மற்றும் 59 ஆவது பிரிவுகளின் தரை நடவடிக்கைக்கான விமானப் படை நடவடிக்கைகளை, முன்னாள் விமானப் படைத் தளபதியான சுமங்கல டயஸ் ஒருங்கிணைத்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கனடாவுக்கான இலங்கைத் தூதுவராக சுமங்கல டயஸை கடந்த ஆண்டு நியமிப்பதாக இலங்கை அறிவித்தபோதே, கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர். சுமங்கல டயஸ் தற்போது இத்தாலிக்கான தூதுவராகப் பதவியேற்றுள்ளார். (ஒ.இ)

### நாடு திரும்பியது சீனப் பாதுகாப்பு அமைச்சர் குழு!

கொழும்பு, ஏப். 30

இலங்கைக்கு உத்தியோக பூர்வ பயணம் மேற்கொண்டிருந்த சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெங் பெங் தனது பயணத்தை நிறைவுசெய்துகொண்டு நாடு திரும்பியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து அவர் நேற்று வியாழக்கிழமை காலை 8.55 மணியளவில் சீனா நோக்கிப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அவருடன் 37 பேர் அடங்கிய குழு இலங்கைக்கு வந்திருந்த நிலையில், அனைவரும் சீன விமானப் படைக்குச் சொந்தமான விசேட விமானத்தில் புறப்பட்டுச் சென்றுள்ளனர் என்று விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ.22)

## சந்தேகத்தை ஏற்படுத்துகிறதாம் பாதுகாப்பு அமைச்சரின் பயணம்

முன்னாள் இராணுவத் தளபதி தெரிவிப்பு



கொழும்பு, ஏப். 30

இலங்கைக்கு சீனப் பாதுகாப்பு அமைச்சர் வருகை தந்தமை தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன என்று முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனா, இந்தியாவில் இலங்கைப் படையினருக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. அந்த நாடுகளின் பாதுகாப்புத்துறை சார் அதிகாரிகள் வருகைதருவது நல்ல விடயம். ஆனால் பாதுகாப்பு அமைச்சர் அதுவும் சீனப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வருவதன் முக்கியத்துவம் என்ன? இந்தப் பயணத்தின் பின்னால் எமக்குப் பல்வேறு சந்தேகங்கள் இருக்கின்றன.

இராணுவத் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சர்கள் போன்றவர்கள் அமெரிக்கா மற்றும் சீனா நாடுகளில் உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் உலகப் பாதுகாப்புடன் தொடர்புடையவர்கள். அமெரிக்க இராணுவத் தளபதி கூட இலங்கைக்கு வருவதில்லை. அரசு அழைத்தாலும் இரண்டாம் அல்லது மூன்றாம் நிலை அதிகாரிகளே வருவார்கள். ஆனால் சீனப் பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வந்தமைக்குப் பின்னால் ஏதோ காரணங்கள் இருக்கின்றன என்று நாம் சந்தேகிக்கின்றோம்- என்றார். (ஒ.இ)

## ரிஷாத் பதியுதீனின் கைது திட்டமிட்ட அரசியல் சதி!

கல்முனை மாநகரசபை அமர்வில் உறுப்பினர் முபீத் கண்டனம்

மட்டக்களப்பு, ஏப். 30

'அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ், மிலேச்சத்தனமான முறையில் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டிருப்பது இன்றைய வங்குரோத்து அரசின் திட்டமிட்ட அரசியல் சதியாகும்' இவ்வாறு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சீ.எம். முபீத் கண்டனம் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்றது. இதன்போதே சீ.எம்.முபீத் தனது கண்டனத்தைப் பதிவு செய்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'இன்றைய கோத்தாபய அரசில் சிறுபான்மையின மக்களின் பாதுகாப்பு மற்றும் வாழ்வுரிமை கேள்விக்குறியாகியுள்ளது. ஒரு உண்மையை மறைப்பதற்காக ஆயிரம் பொய்களை இந்த அரசாங்கம் கூறிவருவதுடன், பல கைதுகளையும் தான்தோன்றித்தனமாக முன்னெடுத்து வருகின்றது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலின் சூத்திரதாரியை இனங்காட்ட வக்கில்லாத அரசு, சிங்கள மக்களை திருப்திப்படுத்துவதற்காக 'ஈஸ்டர்-21' எனும் படத்தை ஓட்டிவருகின்றது. இத்திரைப்படத்தின் ஓர் அங்கமாகவே முன்னாள் அமைச்சர், எம் தலைவர் ரிஷாத் பதியுதீனின் கைதும் தடுப்புக்காவலும் அமைந்துள்ளன.

சபாநாயகரின் அனுமதியோ எத்தகைய நீதிமன்ற பிடியாணையோ இன்றி நடுநிசியில், கதவை உடைத்து உள்நுழைந்து அநாகரிகமான, அடாவடித்தனமான முறையில் குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகள் தலைவர் ரிஷாத்தை கைதுசெய்து சென்றமை பெரும் வருத்தத்துக்குரியதும் கண்டிக்கத்தக்கதுமாகும். நாட்டில் சட்டமும், ஜனநாயகமும் குழிதோண்டிப் புதைக்கப்பட்டள்ளது என்பதையே இக்கைது புலப்படுத்துகின்றது. கடந்த பொதுத் தேர்தலில் தமக்கு முஸ்லிம்கள் வாக்களிக்கவில்லை என்ற வேட்கையில் அரசு பழிவாங்கல்களை முன்னெடுத்து வருவதன் திட்மிட்ட ஓர் அரசியல் பழிவாங்கல் செயற்பாடே தலைவர் ரிஷாத்தின் கைதாகும்.

தலைவர் ரிஷாத் பதியுதீன் விடுதலை செய்யப்பட வேண்டும் - என்றார். (ம-30)

## ஒற்றுமையைச் சிதைக்கவே பிரதேச செயலகம் தரம் குறைப்பு!

மாநகரசபை உறுப்பினர் ஹென்றி

மட்டக்களப்பு, ஏப். 30

தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஓரளவேனும் ஒற்றுமையும், புரிந்துணர்வும் வளர்ந்துவரும் நிலையில்,அதனைக் குழப்பி ஒற்றுமையைச் சிதைக்க வேண்டுமென்ற பின்புலத்துடனேயே, கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலக தரம் குறைப்பு விவகாரம் தூண்டி விடப்பட்டுள்ளது.

இவ்வாறு கல்முனை மாநகர சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் ஹென்றி மகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தொடர்பில் அனுப்பப்பட்டுள்ள அறிவுறுத்தல் கடிதம் அதிர்ச்சியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.


குறித்த தரமிறக்கல் விவகாரம் ஒரு சில முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் அல்லாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் அரசுடன் சேர்ந்து செய்த சதியாகவே மக்கள் மத்தியில் கணிக்கப்படுகின்றது. இந்த அநியாயம், உரிமை மறுப்பு கடந்த 28 வருடங்களுக்கு மேலாக நீடித்துவருகின்றது.

இதற்காக ஜனநாயக ரீதியான பல்வேறு போராட்டங்களும் கல்முனை மாநகரம் வாழ் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்பட்டு வந்தன. அதற்குள் தான் "உப பிரதேச செயலகம்" என்ற தர மிறக்கல் அறிவிப்பும் இன்று வந்துள்ளது.

தமிழ் மக்களின் நீண்ட கால அபிலாசை, உரிமையைப் பெற பக்கபலமாக இருக்க வேண்டும்" - என்றார். (ந-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நிலாவரை

## பாதுகாக்கப்பட வேண்டிய சுற்றுலா மையம்

ம.மோகனதாரணி,
யாழ்.பல்கலைக்கழகம்.

இலங்கையில் சுற்றுலாத்துறை என்பது அதிக வருவாயைப் பெற்றுத்தரும் துறையாகும். அந்த வகையில் வடமாகாணமும் ஏராளமான சுற்றுலா மையங்களைக் கொண்டுள்ளது. புத்தூர் நிலாவரைக்கிணறு, சுற்றுலாத்துறையில் ஏராளமானோரைக் கவரும் மர்மங்களை தன்னகத்தே உடையதாக உள்ளது.

### அமைவிடம்

யாழ்ப்பாண நகருக்கு வடக்கு பகுதியில் 16 கிலோ மீற்றர் தூரத்தில் அச்சுவேலி நோக்கிச் செல்லும் இராச வீதி - புத்தூர் பருத்தித்துறை நெடுஞ்சாலை சங்கமிக்கும் சந்தியில் வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஜே/275 கிராமசேவகர் பகுதியில் உள்ள நவக்கிரி என்றும் ஊரில் நிலாவரைக் கிணறும் நவசைலேசுவரம் என்ற சிவனாலயமும் அமையப் பெற்றுள்ளன.

புராதன காலத்தில் நிலாவரைக் கிணற்றினுடைய ஆழம் எவராலும் அறியப்படாத ஒன்றாக இருந்ததால், வானில் உள்ள நிலாவரைக்கும் அதன் ஆழம் இருந்ததாக சொல்லப்பட்டது. இதலிருந்தே இந்தக் கிணறுக்கு 'நிலாவரைக் கிணறு' எனப் பெயர் சூட்டப்பட்டது என்று செவி வழிக்கதை உள்ளது.

### புராணங்களில் நிலாவரை

நிலாவரைக் கிணறானது, புராதனக் கதைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இராவணனால் கவர்ந்து கொண்டு வரப்பட்ட சீதாப் பிராட்டியை மீட்பதற்காக வானரப்படைகளுடன் இலங்கை வந்த இராமபிரான், சீதாதேவியின் தாகத்தைப் பூர்த்தி செய்வதற்காக தனது அம்பை ஊன்றி நீர் பெற்ற இடமே நிலாவரை என்று புராண இதிகாசங்கள் எடுத்தியம்புகின்றன.

ஆழம் அறிய முடியாத இந்தக் கிணற்றின் ஆழத்தையும் மர்மங்களையும் கண்டறியும் நோக்கில் உலகின் பல பகுதிகளிலிலிருந்தும் பல ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டும் திட்ட வட்டமான தகவல்கள் எதையும் அவர்களால் வெளியிட முடியவில்லை. 2016ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நிலாவரைக் கிணற்றின் உண்மைகளை முடிச்சவிழ்த்து விட்டன என்றுதான் கூறவேண்டும். இலங்கை கடற்படையை சார்ந்த சுழியோடிகள் நவீன பாதுகாப்பு நடைமுறைகளுடன் கிணற்றினுள்ளே 182 அடிவரை கீழ்நோக்கிச் சென்ற போது கிணற்றின் அடிமட்டம் புலப்பட்டது. இரண்டு பனை மரங்களின் உயரம் கொண்டதாக இதன் ஆழம் காணப்பட்டது. கிட்டத்தட்ட 180அடி ஆழம்கொண்டது என்று கூறப்படுகின்றது. சுழியோடிகள் நவீன தொழில்நுட்ப வசதியுடன் எடுத்த புகைப் படங்கள் மூலம் கிணற்றின் அடியில் குகைகள் போன்ற சுரங்கவழிகள் நாலா புறமும் காணப்படுகின்றமை கண்டுபிடிக்கப்பட்டது. நிவாவரைக் கிணற்றுக்கு அண்மையிலுள்ள நவசைலேஸ்வரம் ஆலயத்துக்கும் நிலாவரைக்கும் நெருங்கிய தொடர்புகள் உள்ளன. வரலாற்று தொல்லியல் பின்புலங்களை உடைய நிலாவரை இன்று சுற்றுலாத்துறையிலும் முக்கியத்துவம்மிக்கதாக மாறிவருவதைக் காண முடிகின்றது. இராமாயண காவியத்துடன் தொடர்பு பட்ட ஓர்தளமாக அமைய பெறுவதால் இது இந்தியப் பயணிகளின் வரவேற்பையும் பெற்றுள்ளது எனலாம்.

# தர்மமே தலை காக்கும்

மதுரகவி காரை எம்.பி அருளானந்தம்.





ஒருவர் தம் பொருளை பிறருக்குக் கொடுக்க நினைக்கும்பொழுது அதை மற்றவர் தடுக்கக் கூடாது. இப்போது கூடப் பலர் நல்ல காரியம் செய்வதற்காகப் பொருளைக் கொடுப்பதற்கு முன்வரும் பொழுது, சிலர் அதைத் தடுத்து வேறு சாமான்யமான காரியங்களுக்கு அது பிரயோசனப்படும்படி தானே தட்டிக் கொண்டு போய்விடுகிறார்கள்.

### நல்லன செய்து வாழ்வதே நலம்

நாம் நமது தேவைகளுக்குப் பொருள்களை வாங்கும் பொழுது அதிக விலை கொடுத்து அந்தப் பொருள்களை வாங்குகிறோம். ஆனால் கோயில் போன்ற நல்ல காரியங்களுக்குச் செலவிடும் பொழுதோ தர்ம காரியங்களுக்கு கொடுக்கும் பொழுதோ மிகவும் குறைவாகவே பொருளைக் கொடுக்க நினைக்கிறோம். இப்படி நல்லதைச் செய்வதற்கு எமது மனமே சில சமயங்களில் தடையாக இருக்கிறது.

### விஷ்ணுவும் மூன்று அடி மண்ணும்

பலிச்சக்கரவர்த்தியிடம் மகாவிஷ்ணு வாமனனாக உருவம் தாங்கி வந்து தமக்கு மூன்று அடி மண் யாசித்தார். அப்பொழுது பாதாளம் நோக்கி ஓர் அடியும் ஆகாயம் நோக்கி ஒரு அடியுமாக வாமன ஸ்வரூபம் நீண்டு வளர்ந்து விடுகிறது. மூன்றாவது அடியாகக் கொடுப்பதற்கு இடமே இல்லாததால் தன்னுடைய தலையை நீட்டி அந்த இடத்தில் மூன்றாவது அடியை வைக்கும்படி பலிச்சக்கரவர்த்தி கேட்டுக் கொண்டார். இப்படி மகாவிஷ்ணு வாமனரூபமாக வந்து பலிச்சக்கரவர்த்தியிடம் தானம் கேட்கும் பொழுது அசுரர்களுக்குக் குருவான சுக்ராச்சாரியார் கொடுக்க வேண்டாம் என்று தடை செய்கிறார். ஆனால் மாபலிச் சக்கரவர்த்தியோ கேட்டு வந்திருப்பவர் பகவானே. ஆகவே அவர் கேட்டதெல்லாம் கொடுத்துவிட வேண்டும் என்று தன் தலை உட்பட மூன்று அடியையும் கொடுத்து விடுகிறான்.



### கொடை வள்ளல்களான கர்ணனும் பலிச்சக்கரவர்த்தியும்

கர்ணனும் கேட்ட பொருள்களையெல்லாம் கொடுப்பதில் முதன்மையானவன். பாரதப் போர் ஆரம்பிப்பதற்கு முன்பு அர்ச்சுனனுக்குப் பரிந்து கொண்டு இந்திரன் மாறுவேடத்துடன் வந்து கர்ணனிடம் அவன் கவசகுண்டலங்களை யாசிக்கிறான். அப்பொழுது ஆகாயத்தில் அசரீரியாக ஒரு குரல் கேட்கிறது. "ஏ கர்ணா உன் உடலோடு பிறந்தவை கவசகுண்டலங்கள். அவற்றை நீ இழந்துவிட்டால் உன் திறமை குன்றிவிடும். ஆகவே அவற்றைக் கொடுக்காதே" என்று எச்சரிக்கை செய்தது. அதையும் கர்ணன் கேட்டுவிட்டு தன்னிடம் இந்திரனே மாறுவேடம் போட்டுக் கொண்டு வந்து யாசகம் வாங்க வேண்டியிருக்கிறதே அது ஒன்றே தனக்குப் பெருமை என்று கவச குண்டலங்கள் எல்லாவற்றையும் தானமாக அளித்து விடுகிறான். கொடுப்பதைத் தடுப்பதற்கு முயற்சி செய்ததையும் கூட மீறி கொடுத்த வள்ளல்கள் பலிச்சக்கரவர்த்தியும் கர்ணனும்.

### தர்மமே தலைகாக்கும்

அரிச்சந்திரன் உண்மையைக் காக்கும் பொருட்டு விஸ்வாமித்திரருக்கு அவர் கேட்ட பொருள்களையெல்லாம் அளித்தான். எப்பொழுதும் கேட்பவன் தாழ்ந்தவனாகவும் கொடுப்பவன் உயர்ந்தவனாகவும் ஆகிறான். ஆகவே உயர்ந்த மனிதராகப் போற்றப்படும் மனிதராக வாழ்வதற்கு நாம் எம்மால் முடிந்த அளவு பிறருக்குப் பொருள்களை கொடுக்க வேண்டும். கொடுக்கக் கொடுக்க பொருள்கள் எம்மிடம் வளரும். அவ்வாறு கொடுக்க முடியாவிட்டாலோ கொடுப்பவர்களைத் தடை செய்யாமலாவது இருக்க வேண்டும். என்றென்றும் தான தர்மமே தலை காக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

**மேடம்:** புதிய வேலைக்கான முயற்சிகள் வெற்றிபெறும். கனவு நனவாகும். மனத்துணிவு அதிகரிக்கும். பெண்களின் எண்ணம் நிறைவேறும். அலுவலக கடமை திருப்திகரமாக இருக்கும்.

**இடபம்:** கூடுதல் கவனம் செலுத்திப் பணிகளை முடிப்பீர்கள். அதிகாரியின் குறிப்பறிந்து செயற்பட்டுப் பாராட்டுப் பெறுவீர்கள். வெற்றிக்குத் தேவையான ஆதரவுகள் கிடைக்கும்..

**மிதுனம்:** போட்டிகளில் பங்கேற்கும் போது கவனம் தேவை. பிள்ளைகளின் திறமைகள் வெளிப்பட்டுப் பாராட்டுப்பெறுவர். வீண் அலைச்சல் குறையும். வாய்ப்புகள் கூடும்.

**கடகம்:** மனதுக்குப் பிடித்தவரிடம் இருந்த சச்சரவுகள் மறையும். இளைய சகோதரரிடமிருந்து இனிய செய்தி வந்து சேரும். மனக் கவலைகள் அகலும் நாள். வரவு திருப்தி தரும்.

**சிம்மம்:** பணிக்காகச் சற்று நீண்ட பயணம் செல்ல திட்டம் உருவாகும். நண்பர் ஒருவர் உங்களிடம் மனம் விட்டுப் பேசி நிம்மதி அடைவார். கவனம் தேவை.

**கன்னி:** பொறுப்புகளை அலட்சியம் செய்து புறக்கணிக்க வேண்டாம். மற்றவர் பிரச்சினையை தீர்க்கும் நடவடிக்கையில் வெல்வீர்கள். பணியிட மாற்றத்தைச் சந்திப்பீர்கள்.

**துலாம்:** பணியிடத்தில் ஏற்பட்ட பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். புதிய நண்பர்களுடன் பழகும் போது கவனமாக இருக்கவும். எதிர்பாலினத்தினரால் நன்மையும், லாபமும் கிடைக்கும்.

**விருச்சிகம்** எதிரிகள் அடங்குவர். பழைய கடனில் ஒரு பகுதி வசூலாகும். வாழ்க்கைத்துணையின் அன்பும், ஆதரவும் உற்சாகம் தரும். பணி பற்றிய அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு.

**தனுசு:** சமூக அந்தஸ்து உயரும். விலகிய உறவினர் தொடர்பு கொள்வர். உறவினரால் சில தொல்லைகளைச் சமாளிக்க வேண்டி இருக்கும். உங்கள் ஆலோசனையைப் பிறர் ஏற்பது மகிழ்ச்சி தரும்.

**மகரம்** தாயாருடன் இருந்து வந்த வீண் விவாதம் முடிவடையும். பெண்களுக்கு வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டு. அவசரமோ, பதற்றமோ இல்லாதபடி பார்த்துக் கொள்ளவும்.

**கும்பம்:** மகிழ்ச்சியும், சிரமமும் உங்கள் செயல்கள் மூலம் சமமாக வரும். நேற்றிருந்த தொல்லைகளின் தீவிரம் இன்று மெல்லக் குறையும் .மகிழ்ச்சியான கொண்டாட்டம் நிலவும்.

**மீனம்:** சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இன்று அழைப்பு வரும். நேர்மறை எண்ணங்கள் அதிகமாகும். பணிச்சுமை கூடும். நீங்கள் நம்பிய நபர் உங்களைக் கைவிடாமல் உதவிக்கு வருவார்.

## சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | 2 | 8 | 4 | |
| | | | 1 | | | | | 3 |
| 8 | 2 | 3 | 5 | 7 | | | | 6 |
| | | 7 | | | | 4 | | |
| | 8 | | | | 1 | | 5 | 2 |
| 2 | 1 | | | 5 | | 3 | 6 | |
| | | | 2 | | | | 7 | |
| | | | | 6 | | 1 | | |
| | 3 | 1 | 7 | 4 | | | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 7 | 3 | 8 | 1 | 5 | 2 | 6 |
| 8 | 2 | 5 | 7 | 9 | 6 | 4 | 1 | 3 |
| 6 | 3 | 1 | 2 | 5 | 4 | 9 | 8 | 7 |
| 4 | 8 | 2 | 5 | 1 | 7 | 6 | 3 | 9 |
| 5 | 9 | 6 | 8 | 4 | 3 | 2 | 7 | 1 |
| 7 | 1 | 3 | 9 | 6 | 2 | 8 | 5 | 4 |
| 2 | 7 | 9 | 4 | 3 | 5 | 1 | 6 | 8 |
| 1 | 5 | 4 | 6 | 7 | 8 | 3 | 9 | 2 |
| 3 | 6 | 8 | 1 | 2 | 9 | 7 | 4 | 5 |

**விதி1:** ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்க ளும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

**விதி2:** சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதே போல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.

## கடைசி முயற்சி



இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்புக்கு பல்வேறு உதவிகளை வழங்கியது இந்தியா. இலவச அம்புலன்ஸ் சேவை (1990), கொரோனாத் தடுப்பூசி என்று இந்தியாவின் உதவிகள் தாராளம். ஆனால் தற்போது இந்தியாவில் ஏற்பட்டுள்ள சுகாதார நிலைமைகளை அதனால் கையாள முடியவில்லை.

கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை லட்சங்களை தினமும் எட்டும் நிலையில் அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு ஒக்சிஜன் தேவைப்படுகின்றது. அதனை வழங்க முடியாமல் இந்தியா திணறுகின்றது.

இந்தியாவின் உத்தரப்பிரதேசத்தில் கணவரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக முச்சக்கரவண்டியில் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார் மனைவி. அவருக்கு சுவாசிப்பதற்கு சிரமம் ஏற்படுகின்றது. ஒட்சிசன் சிலிண்டர் இல்லை. அவர் மூச்சுவிட மேலும் மேலும் சிரமப்படுகின்றார். சாவை நெருங்கிக் கொண்டிருக்கின்றார். கடைசிக்கட்ட முயற்சியாக அவரது வாய் ஊடாக காற்றை ஊதி ஒட்சிசன் வழங்க முனைகின்றார் மனைவி. ஆனாலும் துரதிஷ்டம். அவரது கணவர் உயிரிழந்துவிட்டார்.

இந்த நிலைமை இங்கும் வராமல் இருக்க, கொரோனா சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை நாமே கடைப்பிடிப்போம்.

## ஏழரை சனியின் தாக்கத்தைக் குறைக்க பரிகாரங்கள்



பொதுவாக சனிபகவான் ஒரு ராசியில் இருக்கிறார் என்றால், அந்த ராசியுடன், அதன் முன் மற்றும் பின் உள்ள ராசிக்கும் ஏழரை சனி என்று பெயர். பொதுவாக ஏழரை சனி என்றாலே பலரும் அஞ்சுவோம். ஆனால் சனி பகவான் ஒரு பாசக்காரர். அதே சமயம் நீதி நாயகனும் கூட.

எனவே நீங்கள் நீதி தவறாமல் நடப்பவராயின், சனியைக் கண்டு அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. இப்போது ஏழரை சனியின் தாக்கத்தைக் குறைக்க செய்ய வேண்டிய சில பரிகாரங்களைக் காண்போம்.

சனி பகவான் அனுமனின் பக்தர் மட்டுமின்றி, நண்பரும் கூட.

சனி பகவான் அனுமனின் பக்தர்களுக்கு மோசமான விளைவுகளைத் தரமாட்டேன் என்று வாக்குறுதி அளித்துள்ளார். எனவே ஏழரை சனி நடப்பவர்கள், தினமும் அனுமன் தோத்திரத்தைப் பாராயணம் செய்வதால், பெரிதும் பயனடையக்கூடும்.

**எள் எண்ணெய்/கடுகு எண்ணெய் தீபம்**


ஏழரைச் சனி நடக்கும் நபர்கள், சனிக்கிழமை அன்று சனி பகவானுக்கு எள் எண்ணெய்/கடுகு எண்ணெய் தீபம் போட்டு வந்தால், சனி பகவான் சந்தோஷமடைவார். புராணத்தின் படி, கடுகு எண்ணெய் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் அனுமன் சனி பகவானின் காயங்கள் மற்றும் வடுக்களைக் குணப்படுத்த கடுகு எண்ணெயை வழங்கினாராம்.

**காகத்துக்கு சாதம்**

ஏழரைச் சனி நடப்பவர்கள், தினமும் சாப்பிடும் முன் வெள்ளைச் சோற்றில் கருப்பு எள்ளைப் போட்டு பிசைந்து, அதை காகத்துக்கு வைத்து வந்தால், முன்னோர்களின் ஆசி கிடைப்பதுடன், காகம் சனி பகவானின் வாகனம் என்பதால், சனியின் அருளும் கிட்டும்.

**நல்லெண்ணெய் குளியல்**

சனிக்கிழமைகளில் நல்லெண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டியது அவசியம். அதுவும் காலையில் 6-7 மணியளவில் சனி ஹோரையில் நல்லெண்ணெயைத் தேய்த்துக் குளித்தால், சனியின் பாதிப்பில் இருந்து விடுபடலாம்.



## விமர்சனத்துக்குள்ளாகிய சமுத்திரக்கனி

இயக்குநர், நடிகர் என்று சகலதுறையிலும் கலக்கும் சமுத்திரக்கனி வலிந்து சென்று விமர்சனங்களை வாங்கியிருக்கின்றார். அவரது கருத்துக்களுக்கு சமூகத்தில் தனி மதிப்பு உண்டு.

'அந்தகன்' திரைப்பட படப்பிடிப்பில் இப்போது இருக்கின்றார் சமுத்திரக்கனி. அவர் படக் குழுவின ருடன் இணைந்து அண்மையில் தனது பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தார். இதன்போது கேக் வெட்டிய படத்தை சமூக வலைத் தளங்களில் சமுத்தி ரக்கனி பதிவிட்டுள்ளார். அந்தப் படத்துக்கு வாழ்த்துத் தெரிவித்தவர்களை விட விமர்சனங்களை முன்வைத்தவர்கள்தான் அதிகம். அந்தப் படத்தில் சமுத்திரக்கனி உள்ளிட்ட எவரும் முகக் கவசம் அணியவில்லை.


கொரோனா வேகமாகப் பரவும் சூழலில் முன்னுதாரணமாக இருக்கவேண்டிய நீங்களே இப்படிச் செய்யலாமா என்ற விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் கல்வி மறுசீரமைப்பு

கலாநிதி பா.தனபாலன்

உலகளாவிய ரீதியில் நிலையான அபிவிருத்திக்கான முதன்மைக் கருவி கல்வியாகவே உள்ளது. இளமையில் கல், வித்தை விரும்பு, எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும், எழுத்தறிவித்தவன் இறைவனாவான், கல்விக்கழகு கசடற மொழிதல், பிச்சை புகினும் கற்கை நன்றே ஆகிய பொன் மொழிகள் சங்க காலத்திலிருந்து தமிழர்கள் தொடர்ச்சியாகக் கல்விக்குக் கொடுத்த முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. தமிழகத்திலும், இலங்கையிலும், உலகம் முழுவதுமே தமிழர்கள் கல்வியால் உயர்ந்து பல சாதனைகளைச் செய்தார்கள். கல்வி அபிவிருத்திக்குப் பெரும் பங்களிப்புக்களையும் செய்துள்ளார்கள். இவ்வகையில் கல்வியை இற்றைப்படுத்தி அதனூடாக அறிவுப்பொருளாதாரம் மனிதவள முகாமைத்துவத்தை விருத்தி செய்யும் நோக்கில் இலங்கையில் கல்வி மறுசீரமைப்பு பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன. இது தொடர்பாக மக்களின் கருத்துக்களைக் கேட்டறிவதாக இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (https:\\egenuma.moe.gov.lk) இவ் இணையத்தளத்துக்கு அடுத்துவரும் மூன்று மாதங்களுக்குள் கல்வி மறுசீரமைப்புத் தொடர்பான தமது கருத்துக்களை தனிநபர்களோ அமைப்புக்களோ தெரிவிக்க முடியும். இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இக்கட்டுரை முன்வைக்கப்படுகின்றது. இவ்விடயங்கள் தொடர்பான அபிப்பிராயங்களை நீங்களும் முன்வைக்க முடியும்.



## புதிய தேசிய கல்விக் கொள்கையும் அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்தலும்

### கல்விக் கொள்கையாக்கம்

சமுதாய மாற்றங்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்ப கல்விக் கொள்கையாக்கங்கள் விரைவாக நிகழ்ந்து வருகின்றன. இதில் பொருளாதார, அரசியல், சமூக கலாசாரம், உலகமயமாதல், தகவல் தொழில்நுட்பக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

தற்போதைய கல்வி தொடர்பான கொள்கையாக்க முன்மொழிவு 21ஆம் நூற்றாண்டின் அறிவு அடிப்படையில் பொருளாதாரத்துக்கான மனித மூலதனம் உருவாக்கப்பட வேண்டும். இது முன்பள்ளி, ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி, தொழில்கல்வி என்ற பரிமானங்களில் பின்வரும் ஒன்பது துறைகளின் கீழ் வடிவமைக்கப்பட்டுள்ளன.

1. முன்பள்ளிக்கல்வி
2. கல்வி நிர்வாக மறுசீரமைப்பு
3. கலைத்திட்ட மறுசீரமைப்பு
4. சுகாதார தேவைகளுக்கு முக்கியத்துவம்
5. தேசிய பாடசாலைகள் அபிவிருத்தி
6. ஆசிரியர், அதிபர் கல்விப் பணிப்பாளர் வாண்மை விருத்தி
7. பாடசாலைக் கல்வியைத் தொழிற்கல்வியோடு இணைத்தல்
8. தகவல் தொழில்நுட்ப தொலைக்கல்வி மேம்பாடு
9. உயர் கல்வி அபிவிருத்தி

இத்துறைகள் சார்பாக உங்கள் அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்த முடியும். இவ்விடயங்கள் தொடர்பாக எல்லா நிறுவன ரீதியான ஆலோசனைகளும் பெறப்பட்டன. ஆனால் மாகாண ரீதியில், பிரதேச ரீதியில், பொது நிறுவனங்கள் மற்றும் பொது மக்களின் அபிப்பிராயங்கள் இதுவரை போதுமான அளவு கிடைக்கவில்லை. இவ் விடயங்கள் தொடர்பான விழிப்பு உணர்வுகளும் போதுமானதாக இல்லை.

### கல்விச் சவால்கள்

1. கல்வி என்ற முதலீட்டின் மூலம் விரைவான பொருளாதார வளர்ச்சியற்ற இலங்கை நாடு, பெரும் கடன் சுமையில் காணப்படுகின்றமை.
2. கல்வித்துறையில் செலவிடும் பெருமளவு நிதி விரையமாக்கப்படுகின்றமை.
3. தொழில்கள் இருந்தும் கல்வி மூலம் தொழில்திறனற்ற இளைஞர்கள், வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை
4. கல்வி மூலம் சமூக ஒருங்கிசைவு, நாட்டுப்பற்று, ஒற்றுமை இல்லாத நிலை.
5. போதைப்பொருள் பாவனை, வன்முறைகள், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என விழுமியங்களின் சிதைவுகள் அதிகரித்துள்ள சூழல்
6. பாடசாலைக் கல்வி, பொருத்தமற்ற பரீட்சை மையக்கல்வியாக உள்ளமை தொழில்களுடன் சமகாலத் தேவைகளுடன் இணைப்புப் பெறாமல் உள்ளமை.
7. பெருமளவு மாணவர்கள் பாடசாலைக்கு விரும்பிச் செல்லாமை. நெகிழ்ச்சியற்ற செய்முறைகள் அற்ற பரீட்சை மையக்கல்வியால் பெருமளவிலான மாணவர்கள் உள நோய்களுக்கும் தாக்கங்களுக்கும் உட்படுகின்றமை.
8. கல்வித்துறையில் தர மேம்பாடு ஆய்வு அபிவிருத்தி தொடர்பான எண்ணக்கருக்கள் விருத்தியாகமை.
9. ஆசிரிய பயிற்சிக் கற்கைகளில் சமகால வகுப்பறைக்குப் பொருந்தாத கோட்பாடுகளும் ஆய்வுகளும் நடைமுறைகளும்.
10. பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடைய வாண்மைத் தேர்ச்சி தலைமைத்துவ ஆற்றல்கள் போதாமை.

நல்ல ஒரு பாடசாலை என்பது ஒவ்வொரு மாணவனும் தனது திறமைக்கு ஏற்ப சரியான மிகப்பயனுள்ள கல்வியைப் பாடசாலைகளிலுள்ள சிறந்த ஆசிரியர்களிடம் பெறுவதற்கு உதவுவதையே குறிக்கும். இதன்படி ஒரு நல்ல பாடசாலையானது. கல்வித் தொழிலுக்கான தேர்ச்சியை வழங்குவதிலும். ஒழுக்கம் கட்டுப்பாட்டைப் பேணுவதையும் குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும். இத்தகைய நிலையை உறுதிப்படுத்துவது பாடசாலையின் தலைவர் என்ற வகையில் அதிபரின் தலையாய கடமையாகும்.

எனவே சிறந்த கல்வி, தொழில் வழிகாட்டல்கள், ஒழுக்கம், கட்டுப்பாட்டை உறுதிப்படுத்தல் போன்ற இலக்குகளை அடையும் வகையில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் அவர்களின் சுய விருப்பின்படி செயற்பட வைப்பதே பாடசாலைத் தலைமைத்துவமாகும். இதற்கு வலுவூட்டல்களைக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஆனாலும் மேற்கூறப்பட்ட நல்ல பாடசாலைகள் பொதுவாக எமது நாட்டிலும் குறிப்பாக தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு, மத்திய மாகாணத்திலும் எத்தனை உள்ளன? நல்ல பாடசாலைகளை உருவாக்க நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் எவை? எமது அரசியல்வாதிகள் கல்வித்துறை வளர்ச்சிக்கு எவ்வாறான அர்ப்பணிப்பைச் செய்கின்றார்கள்? அவை போதுமானதா? என்பவை தொடர்பான அபிப்பிராயங்களை நீங்கள் தெரிவிக்க முடியும்.

### விளைதிறனுள்ள வகுப்பறைகள்

ஒரு நாட்டின் நிலையான அபிவிருத்தியின் இதயம் பாடசாலை வகுப்பறைகளே ஆகும். இவை உற்பத்தித் திறனுள்ளவைகளாக மாற்றப்பட வேண்டும். இங்கு கற்கும் மாணவர் செயலாற்றுகை தொடர்பாகப் பொறுப்புக் கூறுபவர்களாக ஆசிரியரும் அதிபரும் காணப்படுகின்றனர். விளைதிறனுள்ள பாடசாலை வகுப்பறையின் முன்னேற்றமானது அதிபர் ஆசிரியர்களின் செயற்றிறனிலேயே தங்கியுள்ளது.

இந்தச் செயற்றிறன் உற்பத்தித் திறனிலேயே தங்கியுள்ளது. உற்பத்தித் திறன் இவர்களுடைய வினைத்திறன், விளைதிறனான நடத்தைகளால் ஏற்படுகின்றது. இதற்கு ஆக்கத்திறன் வழிவகுக்கின்றது. இதற்கான கலைத்திட்ட முகாமைத்துவ ஏற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும். தொழில் கல்விக்கான தேர்ச்சிகளையும் பாடசாலையுடனும் உற்பத்தி துறைகளுடன் இணைந்து வழங்க வேண்டும். இன்று தென்கொரியா, சிங்கப்பூர், ஜப்பான், நாட்டுப் பாடசாலைகள் செயற்பாட்டு முறைக் கல்வியுடன் உற்பத்தி சார்ந்த தொழில் கல்விச் செயன்முறையில் பெரும் வெற்றி கண்டுள்ளன.

கல்வி அனுபவங்களைத் தொடர்ச்சியாகப் புனரமைப்புச் செய்வதும், மறு ஒத்திசைவு செய்வதுமே கல்விக் கொள்கையாக்கமாகும். இதற்கு இளைஞர்களை வலுவூட்ட வேண்டும். அவர்களுக்கான வேலைவாய்ப்புக்களை வழங்கக் கூடிய ஒரு கல்வி முறையை விரைவாக ஏற்படுத்த வேண்டும். இது தொடர்பான அபிப்பிராயங்களை உயர்தர மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் தெரியப்படுத்தலாம். இளைஞர்களின் தன்னம்பிக்கை நாட்டு வளர்ச்சிக்கும் ஆதாரம். உழைப்பில் ஆர்வமும் நியாய உணர்வுமே ஒருவரின் தன்னம்பிக்கைக்கும் வீரத்துக்கும் ஆதாரம். தைரியமான மனம், திடமான சிந்தனை, நியாயமான செயல், வலுவான உடல், தன்னால் இயலும் என்ற நம்பிக்கை இவைகளைக் கல்வியால் மட்டுமே உருவாக்க முடியும். இதற்கான ஏதுக்களை உருவாக்கி செயலாற்றுவோமாக. புதிய கல்விச் சீரமைப்பு எமது நாட்டை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு விரைவாக எடுத்துச் செல்ல வேண்டும். இதற்கு அனைவரின் பங்களிப்புக்களும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகவியலாளர்களான

# சிவராம் மற்றும் ரஜீவர்மன் படுகொலை நினைவேந்தல்

## யாழில் கடைப்பிடிப்பு

**யாழ்ப்பாணம்,ஏப்.30**

**படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களான தராகி சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் நினைவு தினம் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது.**

மதியம் 12 மணியளவில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு சிவராம் மற்றும் ரஜீவர்மன் ஆகியோரின் உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து, மலர் தூவி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளர்களில் ஒருவரான தராகி என்றழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 16 ஆண்டுகள் கடந்து விட்டன.

இதேவேளை இளம் ஊடகவியலாளரான செல்வராஜா ரஜீவர்மன் உதயன் பத்திரிகையின் அலுவலக செய்தியாளராக கடமையாற்றி வந்த வேளை கடந்த 2007 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி காலை 10 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனம் தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவங்கள் நடந்து பல ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும், ஊடகவியலாளர்களின் கொலைகளுக்குப் பொறுப்பான குற்றவாளிகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-20)

# இரண்டாவது தடுப்பூசி: பணிகள் ஆரம்பம்

## கிளிநொச்சியில்



கொவிட் 19 தடுப்பூசியின் 2 ஆவது ஊசி செலுத்தும் பணிகள் நேற்று வியாழக்கிழமை முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கு அமைவாக கிளிநொச்சி மருத்துவமனையில் கடமையாற்றும் மருத்துவர்கள், தாதியர் மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி ஏற்றப்பட்டது. (ஐ-6)

★ ★ ★

## மன்னாரில்



மன்னார் மாவட்டத்தில் நேற்று 2 ஆம் கட்ட கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியில் முதலாவது கொரோனாத் தடுப்பூசியை பெற்றுக்கொண்ட சுகாதார முன் கள பணியாளர்களுக்கு மேற்படி 2 ஆம் கட்ட தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்றது.

குறிப்பாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் மாவட்ட பொது மருத்துவமனையில் பிரதான தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கையும், தலைமன்னார் எருக்கலம்பிட்டி ,அடம்பன் மற்றும் முசலி ஆகிய பகுதிகளில் பிரதேச ரீதியாக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையும் இடம்பெற்றன.

அத்துடன் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட சுகாதார பணியாளர்களுக்கான மருத்துவ ஆலோசனை அடங்கிய துண்டுபிரசுரங்கள் மற்றும் கையேடுகள் என்பவை வழங்கப்பட்டன.

நேற்று வியாழக்கிழமை தொடக்கம் எதிர்வரும் மூன்று நாள்களுக்கு குறித்த 2 ஆம் கட்ட தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-213)





# ரிஷாத் சகோதரர்களை விடுதலை செய்க

மன்னாரில் கவனவீர்ப்பு போராட்டம்.

மன்னார், ஏப்.30


வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனையும் அவரின் சகோதரரையும் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்திருப்பதைக் கண்டித்தும், கவனவீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

சுகாதார நடைமுறைகளுடன் கடைப்பிடிக்கப்பட்ட இப் போராட்டத்தில், சிறுவர்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

'சட்டமும் நீதியும் எங்கே? தனிமனித ஜனநாயகம் எங்கே?, 'இனவாதிகளை திருப்திப்படுத்தவா இந்த அநியாய கைது', ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்', நிரபராதிக்கு சிறையா?, 'மக்கள் சேவகன் ரிஷாத் பதியுதீனை விடுதலை செய்', 'சிறுபான்மை மக்களின் குரலை விடுதலை செய்' என்ற வாக்கியங்கள் அவர்கள் ஏந்தியிருந்த பதாகைகளில் காணப்பட்டன.

இப் போராட்டத்தில் மன்னார், முசலி பிரதேச சபைகளின் தவிசாளர்கள் முஜாஹிர் மற்றும் சுபீஹான் உட்பட மன்னார், முசலி, மாந்தை மேற்கு பிரதேச சபைகளின் இவ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். (ந-60)

# தென்மராட்சி பிரதேசத்தில் 71 பேர் கொரோனாவால் பாதிப்பு



சாவகச்சேரி,ஏப்.30

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று வரை 71 பேர் கொரோனாவால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாழ்ப்பாணம்,திருநெல்வேலி மற்றும் மருதனார்மடம் கொத்தணிகளில் பாதிக்கப்பட்டவர்களில் 17 பேர் நாவற்குழியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினரால் பல்வேறு இடங்களில் எழுமாறான பி.சி.ஆர்.பரிசோதனைகளில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டவர்களை விட ஏனைய பிரதேசங்களில், நடத்தப்பட்ட பரிசோதனைகளில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டவர்களின் எண்ணிக்கை பிரதேசத்தில் அதிகம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# உ.த. பெறுபேறு வெளியீடு; அரசிடம் முறையான திட்டம் இல்லை

இம்ரான் எம்.பி சாடல்

கொழும்பு, ஏப்.30

க.பொ.த உயர்தரப் பெறுபேறுகள் விவகாரத்தில் அரசாங்கத்திடம் முறையான திட்டம் எதுவும் இல்லை. இதனாலேயே பெறுபேறு வெளியீட்டுக்கு வெவ்வேறு திகதிகளைச் சொல்லி மாணவர்களும், பெற்றோர்களும் ஏமாற்றப்படுகின்றார்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

மேலும், க.பொ.த உயர்தரப் பரீட்சை நிறைவு பெற்று 6 மாதங்கள் தற்போது கடந்துள்ளன. இதன் பெறுபேறுகள் தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கு முன் வெளியிடப்படும் என முன்னர் சொல்லப்பட்டது. ஏப்ரல் மாதத்துக்குள் வெளியிடப்படும் என பின்னர் சொல்லப்பட்டது. இப்போது இன்னும் 7 நாள்களில் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இன்று ஒரு பரீட்சைப் பெறுபேற்றை வெளியிடும் திகதியை சரியாகச் சொல்ல முடியாத அளவுக்கு அரசாங்கம் முறையான திட்டம் எதுவுமில்லாமல் தடுமாறி வருவதை இதன் மூலம் அவதானிக்க முடிகின்றது. கடந்த காலத்தில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடும் திகதியை முன்கூட்டியே அறிவித்தோம். அதன்படி பெறுபேறுகளை வெளியிட்டோம். இதற்கு காரணம் எம்மிடம் முறையான திட்டம் இருந்தது. அதனால் சரியான திகதியை சொல்ல முடிந்தது. இன்றைய அரசாங்கத்திடம் முறையான திட்டம் எதுவும் இல்லை - என்றார். (ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் இரண்டாவது "டோஸ்"






வவுனியா, ஏப்.30
வவுனியா மாவட்ட பொது மருத்துவமனையில் சுகாதாரத் துறை சார்ந்தவர்களுக்கு நேற்று இரண்டாவது டோஸ் கொரோனாத் தடுப்பூசி ஏற்றி வைக்கப்பட்டது. இந்திய மற்றும் சீன அரசாங்கத்தால் இலங்கை அரசாங்கத்துக்கு கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை பல்வேறு மாவட்டங்களிலும் தேவையின் பொருட்டு பயன்படுத்துவதற்கான நடவடிக்கையை சுகாதார துறையினர் முன்னெடுத்துள்ளனர். அதனடிப்படையில் வவுனியா மாவட்டத்துக்கு இரண்டாவது கட்டமாக ஆயிரத்து 500 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ள நிலையில் முதற் கட்டமாக பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர், மருத்துவர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதாரப் துறையினர், நோயாளர் காவு வண்டி சாரதிகள் உள்ளிட்டவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டப்பட்டன. (வ18)

## முகக்கவசம் அணியாத 10 பேர் நேற்றிரவு கைது

யாழ்ப்பாணம், ஏப். 30
நெல்லியடியில், முகக்கவசம் அணியாது நடமாடிய 10 பேரை பொலிஸார் நேற்று இரவு கைதுசெய்தனர். அவர்களை எச்சரித்த பொலிஸார், பொலிஸ் பிணையில் விடுவித்ததோடு, அவர்கள் மீதான வழக்கு எதிர்வரும் 4ஆம் திகதி தாக்கல் செய்யப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த26)

## வீரகத்தி விநாயகரில் விசேட பூஜை வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப். 30
கொரோனாத் தாக்கத்திலிருந்து விடுபடவேண்டி, யாழ்ப்பாணம் ஊரெழு வீரகத்தி விநாயகர் கோவிலில் நாளை சனிக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இவற்றின் நிறைவில், கோவில் பிரதம குருக்கள் சிவபூஜாநிதி சிவஸ்ரீ ஜ. தியாகராஜக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளது. (த)

## ஏழாலையில் குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப். 30
ஏழாலை இந்து இளைஞர் சபை நடத்தும் குருதிக்கொடை முகாம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.
ஏழாலை உதயசூரியன் சனசமூக நிலையத்தில் நாளை முற்பகல் 9 மணி தொடக்கம் குருதிக்கொடை நடைபெறவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த)

**தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் கம்பனிக்கு
வெல்டர் உதவியாளர்
தேவை.
தொடர்பு: 077 216 7459, 075 996 9173

**வேலையாட்கள் தேவை**
A9 வீதி முறுகண்டியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு வேலையாட்கள் உடன் தேவை.
சமையல் உதவியாளர் பொதி செய்பவர்
சுத்திகரிப்பாளர் உணவு பரிமாறுபவர் காசாளர்
போன்ற பதவிகளுக்கு ஆண்/பெண் இருபாலாரும் தேவை.
தொடர்புகளுக்கு: 077 386 6250

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### இந்தியாவிலிருந்து...

ரில் ஓர் இடத்தை அடையாளப்படுத்த வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த விடயம் பற்றி ஆராயப்பட்டுள்ளது.
இந்தியாவில் தற்போது கொரோனாத் தொற்றின் வேகம் அதிகரித்துள்ளது. தினம்தோறும் ஆயிரக்கணக்கானோர் அங்கு உயிரிழக்கின்றனர். இதனால் அங்குள்ளவர்கள் கடல் வழியாக அங்கிருந்து தப்பித்து இலங்கைக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன. கடற்படையினர் கடலில் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்கவேண்டும் என்றும் கூட்டத்தின்போது ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.
இலங்கையிலிருந்து கடந்த காலப் போர் நடவடிக்கைகளால் இந்தியாவுக்குச் சென்றவர்கள், தற்போது திரும்பி வந்தால் அவர்களை மன்னாரில் தனியான இடத்தில் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதற்குரிய இடத்தை அடையாளம் காண வேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது. (ஒ,5)

### இரண்டாவது....

நாளில் 2 ஆயிரத்து 997 பேர் அதனைப் பெற்றிருந்தனர். ஆனால் இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்ட நேற்றைய முதலாவது நாளில் ஆயிரத்து 374 பேரே ஏற்றிக் கொண்டுள்ளனர்.
வடக்கு மாகாணத்தில் உள்ள 5 மாவட்டங்களிலும் உள்ள மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர்களுக்கும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கும் கொவிட் 19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த தடுப்பூசி மருந்து வழங்கலுக்கு வடக்கு மாகாணத்தில் 9 ஆயிரத்து 944 சுகாதாரத் துறை சேவையாளர்கள் தகுதி பெற்றனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலாவது டோஸை முதல் நாளில் ஆயிரத்து 586 பேர் பெற்றிருந்தனர். இரண்டாவது டோஸை 680 பேர் பெற்றுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் முதலாவது டோஸை முதல் நாளில் 290 பேர் பெற்றிருந்தனர். இரண்டாவது டோஸை 55 பேர் பெற்றுள்ளனர்.
மன்னார் மாவட்டத்தில் முதலாவது டோஸை முதல் நாளில் 448 பேர் பெற்றிருந்தனர். இரண்டாவது டோஸை 393 பேர் பெற்றுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் முதலாவது டோஸை முதல் நாளில் 313 பேர் பெற்றிருந்தனர். இரண்டாவது டோஸை 146 பேர் பெற்றுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் முதலாவது டோஸை முதல் நாளில் 360 பேர் பெற்றிருந்தனர். இரண்டாவது டோஸை 100 பேர் பெற்றுள்ளனர். (ஒ,5,26)

**மரண அறிவித்தல்**

பிறப்பு 06 . 05 . 1956



இறப்பு 26 . 04 . 2021

**திருமதி ஜெகதீஸ்வரன் சிறிதங்கநாயகி**

சுதுமலை தெற்கைப் பிறப்பிடமாகவும், இத்தாலி Messino வை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகதீஸ்வரன் சிறிதங்கநாயகி 26.04.2021 அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை சர்வலோகநாயகி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகளும், சிதம்பரப்பிள்ளை ஜெகதீஸ்வரன் (இத்தாலி) அவர்களின் அன்பு மனைவியும், தினேஷ் (இத்தாலி), சிந்துஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், அரவிந்த் (பிரான்ஸ்) அவர்களின் மாமியும், ஜெஸ்வினி, கிர்த்திஷ் அஞ்ச் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திரிபுரநாயகி (கொழும்பு), சிறிஸ்காந்தன் (கனடா), சிறிகணநாதன் (சித்தன்கேணி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவமலர், சிவபாக்கியம், சிவராஜா, சிவலோகநாயகி, காலஞ்சென்ற பாக்கியலட்சுமி மற்றும் விக்கினேஸ்வரன், சிவராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் Messino, Italy இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரதான வீதி, சித்தன்கேணி.
சிறிகணநாதன் (சகோதரன்)
077 610 3225

**அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு**

பிறப்பு 03 . 03 . 1942



இறப்பு 31 . 03 . 2021

கடந்த 31.03.2021 புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

**அமரர் சுப்பிரமணியம் றோசம்மா( றோசக்கா)**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.04.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு வேண்டி அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிறுகிறது...

தற்போது கொரோனாத் தொற்று நாட்டில் தீவிரமடைந்துள்ளது. பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எனினும் நாளாந்தம் கண்டறியப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது.

கடந்த காலங்களைப் போலல்லாது இந்த முறை கொரோனாத் தொற்று மிக வேகமாக உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. நாட்டை முடக்குவது சிறந்தது என்று துறைசார்ந்தவர்கள் கோரி வருகின்றபோதும், பொருளாதார நெருக்கடிகளால் தற்போது நாட்டை முடக்க முடியாது என்று அரசு அறிவித்துள்ளது.

நாளாந்தம் ஆயிரக்கணக்கானவர்கள் தொற்றுடன் அடையாளப்படுத்தப்படும் நிலையில் நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 484 ஆக எகிறியுள்ளது.

அதேவேளை, 362 பேர் கொரோனா வைரஸ் தொற்றுப் பாதிப்பிலிருந்து குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ள நிலையில், தொற்றிலிருந்து மீண்டோரின் மொத்த எண்ணிக்கை 95 ஆயிரத்து 445 ஆக அதிகரித்துள்ளது. (எ-22)

## வங்கிகளுக்கு...

தினமாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மே முதலாம் திகதியான நாளை சனிக்கிழமை, சர்வதேச தொழிலாளர் தினம் என்பதால் அனைத்து வங்கிகளுக்கும் இன்று விசேட அரை நாள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை, கொழும்பு பங்குச் சந்தை இன்று பிற்பகல் 12.30 மணி வரை மட்டுமே திறக்கப்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9,22)

## மாமனார்....

உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் மாமனாரே தாக்குதல் நடத்தியுள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 4.30 மணியளவில் நடந்துள்ளது. பெ.ரவிச்சந்திரன் (வயது36) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இருவருக்கு இடையே ஏற்பட்ட தகராறில் மாமனார் ரவிச்சந்திரனைத் தாக்கினார் என்று கூறப்படுகின்றது. காயமடைந்த ரவிச்சந்திரன் தருமபுரம் மருத்துவமனையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து கிளிநொச்சி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார் என்றும், அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-113)

## கஞ்சாவுடன்...

20 வயதுடையவர்கள் என்றும், அவர்களில் ஒருவரிடம் இருந்து ஆறு கிலோ கஞ்சாவும், மற்றொருவரிடம் இருந்து 2 கிலோ கஞ்சாவும், மற்றையவரிடம் 500 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து முச்சக்கர வண்டி ஒன்றும், மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவித்த பொலிஸார் விசாரணைகளின் பின்னர் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் தெரிவித்தனர். (எ-26)

## கொவிட் சிகிச்சை...

டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியை கொரோனாச் சிகிச்சை நிலையமாக மாற்ற பரிந்துரைக்கப்பட்டிருந்தபோதும் அது போதிய வசதிகளுடன் காணப்படவில்லை என்று இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர். அதையடுத்து வன்னிப் பிராந்தியத்தில் கொரோனா வைத்தியசாலை அமைப்பதற்குரிய இடத்தை அடையாளம் காணவேண்டும் என்று முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களின் மாவட்டச் செயலர்களுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேவேளை, வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்தில் கோப்பாயிலும், கிளிநொச்சியில் கிருஸ்ணபுரத்திலும், முல்லைத் தீவில் மாங்குளத்திலும் கொரோனா சிகிச்சை நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. (ஒ-5)

## யாழ்ப்பாணத்தில்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் நேற்று 760 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 19 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 4 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள். ஒருவர் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பயிலும் திருகோணமலையைச் சேர்ந்த ஆசிரிய பயிற்சியாளர்.

சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் கொடிகாமம் சந்தை மற்றும் கொடிகாமம் வர்த்தக நிலையங்களைச் சேர்ந்தவர்கள்.

நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டவர்கள்.

சாவகச்சேரி மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வந்த ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட யாழ்ப்பாணம் பல்கலைக் கழக சட்டத்துறை மாணவன் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா வைத்தியசாலையில் இருவருக்கும் கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒருவருக்கும் முல்லைத்தீவு வைத்தியசாலையில் ஒருவருக்கும் என நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## கொடிகாமத்தில்...

தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் கொடிகாமம் நகர்ப் பகுதி வர்த்தகர்கள் மற்றும் சந்தை வியாபாரிகளுக்கு நேற்று முன்தினம் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் மரக்கறி வியாபாரி ஒருவருக்கும், 3 வர்த்தகர்களுக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதையடுத்து இன்று மீண்டும் சந்தை வியாபாரிகள், வர்த்தகர்கள், தொழிலாளர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது என்று சுகாதாரப் பரிவினர் தெரிவித்தனர். சந்தை மற்றும் வர்த்தக நிலையங்களில் தொற்று நீக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-159)

## கொரோனா....

அறிவித்தது.

இந்த உயிரிழப்புகளுடன் நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 667 ஆக உயர்ந்துள்ளது. (எ-இ)

## இரண்டாவது...

கின்றன. இன்னும் 6 லட்சம் தடுப்பூசிகள் தேவை எனவும் சுகாதாரத் தரப்பினர் கூறுகின்றனர்.

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு இந்தியாவின் தயாரிப்பான ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன. அவர்களுக்கு இரண்டாது டோஸ் ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முதலாவது டோஸ் ஏற்றிய அனைவருக்கும் இரண்டாவது டோஸ் ஏற்றுவதிலேயே சிக்கல் நிலைமைகள் தோன்றியுள்ளன.

இந்தியா ஏற்கனவே அனுப்பி வைத்த தடுப்பூசிகளில் 3 லட்சத்து 30 ஆயிரம் தடுப்பூசிகள் கைவசம் இருக்கின்ற நிலையில், மேலும் 6 லட்சம் தடுப்பூசிகள் தேவைப்படுகின்றன என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில், அவர்கள் மேலதிகமாக வழங்குகிறோம் எனத் தெரிவித்த தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட ஐந்து நாடுகளிடம் இருந்து ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராஜெனகா தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும், அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் என நம்புகிறோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கையிருப்பில் உள்ள தடுப்பூசிகளை எதிர்வரும் ஜூன் மாதம் 7 ஆம் திகதி வரை ஏற்ற முடியும் எனவும், அதற்குள் அவசியமான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒருவருக்கு இரண்டு தடுப்பூசிகளை ஏற்றுவதை விடவும் ஒருவருக்கு ஒரு தடுப்பூசியை ஏற்றி, சகலருக்கும் பாதுகாப்பு வழங்குவது இப்போதுள்ள நிலையில் ஆரோக்கியமானது எனத் தான் கருதுகிறேன் என இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். (ஒ-22)

## குளிரூட்டப்பட்ட...

சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும்.

இவ்வாறு தொற்று நோயியல் பிரிவின் தலைமைத் தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மூடிய அறைகளுக்குள் தொழில் செய்வது மிகவும் ஆபத்தானது. ஒரு நபர் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை மூடியிருக்கும் ஒரு சிறிய அறையில் இருந்தால், முக்கியமாக குளிரூட்டப்பட்ட பகுதியில், கொரோனாத் தொற்று நோய் மற்றொரு நபருக்குப் பரவ அதிகம் வாய்ப்புள்ளது. எனவே, இது போன்ற இடங்களில் ஜன்னல்கள் மற்றும் கதவுகளை முடிந்தவரை திறந்து வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தகைய இடங்களில் முகக் கவசம் அணிவது, கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவுதல் போன்ற சுகாதார வழிகாட்டல்களை அவசியம் கடைப்பிடிக்க வேண்டும் என்றார். (எ-22)

## மத வழிபாடுகளுக்கு...

தற்போது நடைபெற்று வரும் சூழலில் மக்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆலயத் திருவிழாக்களுக்கு மக்களை அனுமதிப்பதில்லை என்று வடக்கு மாகாண ஆளுநரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது என மாவட்டச் செயலர் க.மகேசன் ஊடகங்களுக்கு அறிவித்துள்ளார்.

வணக்கத் தலங்களில் சமய நிகழ்வுகளை அந்தத் தலத்துக்குப் பொறுப்பான மதத் தலைவர்கள், பரிபால சபையினர் மற்றும் நிகழ்வை ஏற்பாடு செய்யும் உபயகாரர்களுடன் மட்டும் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுகின்றது. சமய நிகழ்வுகள் அனைத்தும் அந்தத் தலத்தின் உள்வீதியில் மட்டுமே நடத்தப்படலாம். வெளிவீதிகளில் நடத்தப்படும் எந்த ஒரு நிகழ்வுக்கும் மறு அறிவித்தல்வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

திருமண மண்டபங்களில் அல்லது விடுதிகளில் ஆகக் கூடியது 150 பேருடன் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படும். திருமண நிகழ்வை நடத்துவதற்கு உரிய அனுமதி ஒரு வாரத்துக்கு முன்பே அந்தப் பிரதேசத்துக்குரிய சுகாதார வைத்திய அதிகாரியிடமிருந்து பெறப்பட வேண்டும்.

திருமண வைபவத்தின்போது இந்த நடைமுறைகள் பின்பற்றப்படுவதை சுகாதாரத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களும், பொலிஸ் திணைக்கள உத்தியோகத்தர்களும் கண்காணிப்பர்.

திருமண வைபவம் நிறைவுபெற்ற பின்னர் அதில் பங்குபற்றியவர்களின் முழு விவரங்களை அந்தப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்குக் கட்டாயம் அனுப்ப வேண்டும். இந்த நடைமுறைகளை மீறி நடத்தப்படும் திருமண மண்டபங்களுக்கும், ஏற்பாட்டாளர்களுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரை அரங்குகளில் அங்குள்ள ஆசனங்களின் 25 வீத ஆசனங்களில் அமரக்கூடிய எண்ணிக்கையைக் கொண்ட பார்வையாளர்களுடன் இயங்க அனுமதி வழங்கப்படும் என்றும் மாவட்டச் செயலர் அறிவித்துள்ளார்.

அதேவேளை மத வழிபாட்டுத் தலங்களில் எந்த நேரத்திலும் அதிகபட்சமாக 25 பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்று நேற்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (ஒ.5,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகளவில் கொரோனா 15 கோடியைக் கடந்தது

**வொஷிங்டன், ஏப்ரல் 30**

**உலகளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 15 கோடியைக் கடந்துள்ளது என்று உலக சுகாதார நிறுவனத்தில் புள்ளிவிவரங்கள் குறிப்பிடுகின்றன.**



இந்தப் பெருந்தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட நாடுகளின் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் முறையே அமெரிக்கா, இந்தியா, பிரேசில் ஆகிய நாடுகள் உள்ளன. நேற்று மாலை வரையிலான உத்தியோகபூர்வ தகவல்களின் அடிப்படையில் கொரோனாவால் இதுவரை உலகளவில் 15 கோடியே 5 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் 3 கோடியே 30 லட்சம் பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியாவில் நேற்று மாலை வரை ஒரு கோடியே 85 லட்சம் பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பிரேசிலில் ஒரு கோடியே 45 லட்சம் பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றில் இருந்து சுமார் 12 கோடியே 90 லட்சம் பேர் மீண்டுள்ளனர். சுமார் 32 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர்.

கொரோனாப் பாதிப்பு அதிகம் உள்ள நாடுகளின் பட்டியலில் நான்கு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே பிரான்ஸ், ரஷ்யா, துருக்கி, பிரிட்டன், இத்தாலி, ஸ்பெயின் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் உள்ளன. (ம)



கோமரங்கடவெல பிரதேச மருத்துவமனை, கொரோனாப் பரவலை அடிப்படையாக கொண்டு பிரதேச மக்களது மருத்துவ வசதிகளை மேலும் சிறப்பாக வழங்கும் வகையில் இடைத்தர பராமரிப்பு மத்திய நிலையமாக செயற்படவுள்ளது. அங்கு மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாண வேலைகளை திருகோணமலை மாவட்ட செயலர் சமன் தர்சன பாண்டிகோராள பார்வையிட்டார். (வ-40)

## தொழில் முயற்சிகளை மேம்படுத்தி பொருளாதாரத்துக்கு வலுச்சேர்க்குக!

### திருமலை மாவட்ட செயலர் தெரிவிப்பு

திருகோணமலை, ஏப்.30

சௌபாக்கிய உற்பத்திக் கிராமத்தின் மூலம் வருமானம் குறைந்த மக்களின் தொழில் முயற்சிகளை மேம்படுத்தி நாட்டின் பொருளாதாரத்துக்கு வலுச்சேர்க்க முடியும் என்று திருகோணமலை மாவட்டச் செயலர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற சௌபாக்கிய உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் 10 கிராமங்கள் இதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் அரச அனுசரணையில் தொழில் முயற்சிகளை ஆரம்பித்து சிறந்த தொழில் முயற்சியாளர்களாக மக்களை மாற்ற முடியும்.



இத் திட்டத்தை சிறப்பான திட்டமாக திருகோணமலை மாவட்டத்தை மாற்றி, ஏனைய மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாக அமையுமாறு செயற்படுத்த அனைவரும் உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் என்றார்.

தேசிய ரீதியாக 500 கிராமங்கள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. சமுர்த்தி பெறும், சமுர்த்தி பெறாத வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு தாம் மேற்கொள்ளும் தொழில் முயற்சியை மேலும் வலுப்படுத்தி அல்லது புதிய ஆக்கபூர்வமான நடைமுறைக்கு சாத்தியமான தொழில் முயற்சிகளை ஏற்படுத்தி அவர்களை வருமானம் ஈட்டக்கூடியவர்களாக மாற்றியமைத்து நாட்டின் பொருளாதாரத்துக்கு வலுச்சேர்ப்பதே இதன் நோக்கமாக அமைவதாக சௌபாக்கிய அபிவிருத்தி பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் வசந்த குணரத்ன இதன்போது தெரிவித்தார். (ற-இ)

## ஒப்பனை நிலையங்களுக்கு தொழிலாளர் தினத்தில் விடுமுறை

தொழிலாளர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் எல்லைக்குட்பட்ட அனைத்து ஒப்பனை நிலையங்களுக்கும் நாளை சனிக்கிழமை விடுமுறை வழங்கப்படுகிறது.

நாளைமறுதினம் வழமையான விடுமுறை தினம் என்று யாழ்ப்பாண மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ)

## மணல் மாபியாக்கள் திருமலையில் அடாவடி

### வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் தெரிவிப்பு

திருகோணமலை, ஏப். 30

எந்த அரசாங்கம் ஆட்சிக்கு மாறி மாறி வந்தாலும் திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மண் மாபியாக்கள் ஓய்ந்தபாடில்லை என்று திருகோணமலை மாவட்ட வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கே.குலதீபன் தெரிவித்தார்.

திருகோணமலையில் நேற்றுமுன்தினம் தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மண் அகழ்வு பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக திருகோண மலையில் உருவெடுத்துள்ளது. சொந்த மாவட்ட மக்களுக்கு மண் அனுமதிப்பத்திரம் வழங்காமல் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கே அதிகமான அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு மண் வளங்கள் சுரண்டப்பட்டு வருகின்றன.

கொழும்பு, வவுனியா மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட இதர மாவட்டங்களுக்கு மண் ஏற்றுமதியால் உள்ளூர் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு டிப்பர் மண் சுமார் 30 ஆயிரம் ரூபா அளவில் அதிகரித்து செல்கின்றது. திருகோணமலை மண் வளத்தை முழுக்க முழுக்க வெளி மாவட்ட மண் மாபியாக்களே அனுபவிக்கின்றன.

இங்குள்ளவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா அளவில் மண் வழங்கப்பட வேண்டும். ஆனாலும் 30 ஆயிரம் ரூபாவுக்கே வழங்கப்படுகிறது. இதற்கு அரச அதிகாரிகளே உடைந்தையாளர்களாக இருக்கின்றார்கள். அவர்களின் உறவினர்களுக்கு இலகுவாக மண் ஏற்றுமதி அகழ்வுக்கான அனுமதியைப் பெற்றுக்கொடுக்கிறார்கள். இதன் ஊடாக திருகோணமலை மாவட்டத்துக்கு தொடர்ந்தும் அநீதி இழைக்கப்படுமானால் வீதியில் இறங்கி போராடத் தயாராகவுள்ளோம் -என்றார். (ற-இ)

**வேலையாட்கள் தேவை**
சைவ உணவகமொன்றிற்கு அனுபவமுள்ள
- சமையலாளர் - சமையல் உதவியாளர்
- விநியோகஸ்தர் தேவை.
- தங்குமிடவசதி இல்லை
வண்ணை சாந்தையர்மடம்
கற்பக விநாயகர் கோவில் அருகாமை
(K.K.S றோட்) T.P:076 553 0813

**வேலையாட்கள் தேவை**
யாழ்.நகரில் இயங்கிவரும் விற்பனை நிறுவனத்திற்கு
- வாகன சாரதி (Sales Driver)
- விற்பனைஉதவியாளர் (Sales Helper)
தேவை.
தொடர்பு: 076 096 9728

**வீடு விற்பனைக்கு உண்டு**
31/3, டேவிற் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு
தொடர்புக்கு: 076 106 1407, 077 526 1407
021 222 1270

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.